ஏப்ரல் - 8 **அனைத்துலகப் பெண்கள் நாள்** மார்ச் - 8

# களத்தில்



எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிற்பதால், மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து கொடாமல் எம்மால் தலைநிமிர்ந்து நிற்க முடிகின்றது.

*தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*

08-03-2001 நாடகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (229)

பிரித்தானியா சிறீலங்கா குறித்து மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. சிறீலங்கா, பிரித்தானியாவின் முக்கியமான வர்த்தக, முதலீட்டு பங்காளி. சிறீலங்காவிற்கும் பிரித்தானியாவிற்கும் இடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் மேலும் பலம் பெறுவதைக் காணவே விரும்புகின்றேன்.

*பிரித்தானியாவின் வெளிவிவகார துணை அமைச்சர் பீற்றர் கெயின், 23-11-2000 அன்று கொழும்பில்.*




## விடுதலைப் புலிகள் மீதான பிரித்தானியாவின் தடை

# ஆங்கிலேயர் - தமிழர் உறவில் துக்கநிகழ்வு

**நீதிக்கும் அநீதிக்கும் இடையே நடைபெற்ற பரபரப்பான இராஜதந்திரப்போர் ஒன்றை, பாரபட்சமான முறையில் பிரித்தானிய அரசு முடிவிற்குக் கொண்டுவந்திருக்கின்றது. சிங்களத்தின் வலியுறுத்தல் ஒருபுறமும், தமிழ்த்தேசத்தின் ஒருமித்த கோரிக்கைக்குரல் ஒருபக்கமுமாக இரண்டு தேசிய நலன்கள் சர்வதேசத் தளத்தில் மோதிக்கொண்டன. தமிழ்மக்களின் விடுதலைக்கெதிரான கூட்டுச்சக்திகளின், அழுத்தங்களுக்கு அடிபணிந்து பிரித்தானிய அரசு இறுதியில், விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இடுவதாக அறிவித்திருக்கின்றது.**

தமிழ்மக்களின் அரசியல் உரிமைக்காகப் போராடுகின்ற உண்மையான மக்கள் இயக்கமான விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு, பிரித்தானிய அரசினால் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டிருக்கின்றது.

பயங்கரவாத அமைப்புக்கள் என்ற பட்டியலில், பிரித்தானிய அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் சேர்த்திருப்பது, தமிழ் மக்கள் மத்தியில் ஏமாற்றத்தையும், ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியிருக்கின்றது. பிரித்தானியாவின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து, தமிழ்ச்சமூகத்திடம் இருந்து பலவிதமான குரல்கள் எழுந்திருக்கின்றன.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் தொடரும் இந்நிலையில், பிரித்தானிய அரசின் இந்த நடவடிக்கை, பொறுப்புள்ள நடவடிக்கையாகக் கருத இடமில்லை.

நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு இது பெரும் பாதிப்பை இழைக்கும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள்.

பெப்ரவரி 28ஆம் திகதி, பிரித்தானிய நாடாளுமன்றத்தில், அதன் உள்துறை அமைச்சர் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பையும் இணைத்திருப்பதாக அறிவித்ததைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கருத்து வெளியிடுகையில், 'இன்றையநாள், ஒரு சோகநாள். ஆங்கிலேயர் - தமிழர் உறவில் நிகழ்ந்த துக்கநாள்' என வர்ணித்தார்.

'விடுதலைப் புலிகளின் உத்தேசத் தடைக்கு எதிராக ஒன்றுதிரண்டு எழுந்து, ஒருமித்த குரல் எழுப்பிவந்த தமிழீழ மக்கள் பிரித்தானிய அரசின் முடிவினால் ஆழ்ந்த கவலையும் ஏமாற்றமும் அடைவர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை, தமிழரின் நலன்களுக்கு பெரும் குந்தகமாக அமையும். சமாதான முயற்சிகளைப் பாதிக்கும். பிரித்தானிய அரசின் இந்த முடிவு சிங்கள இனவாத அரசின் விட்டுக்கொடாத கடும்போக்கை மேலும் தீவிரப்படுத்தும். இராணுவப் பாதையில் சென்று போரையும் வன்முறையையும் அரச பயங்கரவாதத்தையும் முன்னெடுக்கும் அதன் கொள்கைக்கும் ஊக்கமளிப்பதாக அமையும்.' என்று தெரிவித்தார் திரு. பாலசிங்கம் அவர்கள்.

'பிரித்தானிய தடைச்சட்டத்தில், பயங்கரவாதம் என்ற பதத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கும் மிகவும் அகன்ற, தெளிவற்ற வரைவிலக்கணத்தின்படி, சுதந்திரத்திற்கும் கௌரவத்திற்குமாக நிகழும் நியாயமான அரசியற் போராட்டங்கள் அனைத்துமே பயங்கரவாதமாகக் கருதப்படுகின்றது. இந்த வரைவிலக்கணத்தின் தர்க்கத்திற்கு அமையவே விடுதலைப் புலிகளுக்கும் பயங்கரவாதப் பட்டம் சூட்டப்பட்டிருக்கின்றது. தமிழரின் அரசியற் போராட்டத்தின் நீண்ட, சிக்கலான வரலாற்றையோ, அன்றி இனக்கொலைப் பரிமாணத்தில் விஸ்வரூபம் பெற்றுநிற்கும் சிங்கள அரசுகளின் ஒடுக்குமுறை வரலாற்றையோ அல்லது அடக்குமுறைக்கு எதிராகத் தோற்றம்கொண்ட ஆயுதப் போராட்டத்தின் மகத்துவமான வரலாற்றையோ இந்தத் தடைச்சட்டத்தை இயற்றியவர்கள் அறியவில்லை. போலும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரித்தானிய தடைச்சட்டமானது பௌத்த இனவாதத்திற்குக் கிடைப்த பெரும் வெற்றியாகும். அத்தோடு நீதிக்கும் சமாதானத்திற்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.' என்று குறிப்பிட்டார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள்.

பிரித்தானிய பாராளுமன்றத்தில், உள்துறை அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, இந்தப் பயங்கரவாதப் பட்டியல், பாராளுமன்ற அங்கீகாரத்திற்காகக் காத்திருக்கின்றது. ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் துணையுடன் அது ஏற்றுக்கொள்ளப்படும் என்றே நம்பப்படுகின்றது.

எப்படியிருந்தபோதும், பிரித்தானியா தனக்குரித்தான வரலாற்றுப் பொறுப்பை நிராகரித்து, பாரபட்சமாக நடந்துகொண்டிருக்கின்றது.

நோர்வேயின் சமாதான முயற்சி சிக்கலுறும் என்ற நிலையிருந்தும், பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் சேர்த்திருக்கின்றது. பேச்சுவார்த்தை மேசைக்கு சரிசமனான நிலையில் இருதரப்பையும் கொண்டுவரும் முயற்சிக்கு ஆதரவு தரவேண்டிய பிரித்தானிய அரசு, தமிழர் தரப்பை பலவீனப்படுத்துவதுடன், சிங்கள பௌத்த பேரினவாதத்தை பலப்படுத்திவிடும் வேலையையே மேற்கொண்டிருக்கின்றது.

எது எப்படியிருப்பினும், சமாதான முயற்சியை விடாது தொடருவோம் எனவும், நோர்வே அரசுக்கு எம்மாலான ஒத்துழைப்புக்கள் அனைத்தையும் வழங்குவோம் எனவும் விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

பிரித்தானிய அரசு, விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் இடுவதாக அறிவித்த சில மணிநேரங்களில், சிறீலங்கா அரசு கிளாலிப் பகுதியில் பாரிய குண்டுவீச்சுக்களை நடத்தி, தனது இராணுவக் கடும்போக்கிற்கும் அழிவுப்பாதைக்கும் பிரித்தானிய அரசு பச்சைக் கொடி காட்டியிருப்பதாக, நடந்துகொண்டிருக்கின்றது.

சிறீலங்கா அரசின் இராணுவவாதக் கடும்போக்கும், பிரித்தானியாவின் பாரபட்சமான நடவடிக்கையும், இலங்கைத்தீவில், சமாதான முயற்சிகள் வெற்றியளிக்குமோ? பதிலாக பெரும் இரத்தக்களரியும் அழிவுகளும் தோன்ற வழிவகுத்துவிடுமோ என்ற அச்சம் நிலவவே செய்கின்றது. இத்தகைய மோசமான அழிவுச் சூழ்நிலை தோன்றுமாயின், அதற்கு, இதற்குக் காரணமானவர்களே கூட்டுப்பொறுப்பேற்கவேண்டும். ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**



# சொந்தப் பலத்தில் வேரூன்றி நிற்கும் விடுதலைப் பெரு விருட்சம்

சிங்களப் பேரினவாத அரசு, விடுதலைப் புலிகளை இராணுவ அரசியல் தளங்களில் சந்திக்கும் திராணியை இழந்துவிட்டது. உலகநாடுகள் பலவற்றின் இராணுவ பொருளாதார உதவிகளைப் பெற்றபோதும், விடுதலைப் புலிகளை சிங்கள அரசால் இராணுவரீதியாக வெல்லமுடியவில்லை. அரசியல்ரீதியாகவும் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்வது முடியாத காரியமாகிவிட்டது சிங்கள அரசிற்கு. இந்த நிலையிலேயே, விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு சந்திரிகா அரசு உலக நாடுகளிடம் கோரிக்கை விடுத்துவருகின்றது. சாத்தியப்படக்கூடிய இடங்களில் இதுவிடயத்தில் சிறீலங்கா அரசு அழுத்தங்களையும் கொடுத்து வருகின்றது.

விடுதலைப் புலிகளுக்கு, வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழ் மக்களிடம் இருந்து கிடைக்கும் பொருளாதார உதவிகளைத் தடுப்பது, தமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு திரட்டி சர்வதேசரீதியாக தமிழ்மக்களால் மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்களை முடக்குவது இதன் நோக்கமாகும்.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் அமெரிக்காவை இடவைப்பதில், சில ஆண்டுகளுக்கு முன்னர் வெற்றிபெற்ற பௌத்த சிங்களப் பேரினவாதம், தற்போது பிரித்தானியாவிலும் வெற்றி பெற்றிருக்கின்றது. பிரித்தானியாவில் தாம் பெற்ற இந்த வெற்றிக்கு, இந்தியாவும் ஒருவகையில் காரணம் எனத் தெரிவித்து, இந்தியாவிற்கும் நன்றி தெரிவித்திருக்கின்றது சிறீலங்கா அரசு.

உலகநாடுகள் பலவற்றின் இராணுவ நிபுணர்கள் பயிற்சி வழங்கி, இராணுவத்திட்டமிடலில் ஆலோசனைகள் வழங்கியபோதும், உலகநாடுகள் பலவற்றிடம் இருந்து, நவீன போர்க்கருவிகள் வாங்கிக் குவித்தபோதும் சாத்தியப்படாத வெற்றியை, இவ்வகையில் சாத்தியமாக்கிவிடலாம் என்ற கனவில் காரியமாற்றுகின்றது சிறீலங்கா அரசு.

தமது சொந்த மக்களின் பலத்தில் மாத்திரமே எழுந்து நிற்கும் விடுதலைப் போராட்டப் பெருவிருட்சத்தின் பக்கவேர்களை அறுத்து, அதனை அடியோடு சரித்துவிடலாம் எனச் சிங்களம் கனவு காண்கின்றது.

பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து, பல சவால்களைச் சந்தித்து, அவற்றை வெற்றிகொண்டு பயணப்படும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இயங்கு திசையில், அதன் போராட்ட உறுதியில் விரைவையும் வீரியத்தையும் ஏற்படுத்தும் புறத் தாக்கங்களாகவே இத்தகைய நிகழ்வுகளைக் கொள்ளமுடியும்.

சிங்களப்பேரினவாதம் உலகம் முழுவதும் அலைந்து திரிந்து, தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கெதிரான பரப்புரைகளை மேற்கொள்வதுடன், தனது தமிழின அழிப்புக் கொள்கைக்கு ஆதரவுதேடிவருகின்றது.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை இது, அவர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கியமான காலகட்டம். எதிர்ப்படும் சவால்களை முறியடித்து, தமது அபிலாசைகளை வென்றெடுக்க உறுதிபூணும் காலம். இக்காலகட்டம், தமிழ் மக்களிடத்தே ஒரு விதமான எழுச்சியையும், தன்மான உணர்வையும் தோற்றுவித்திருக்கின்றது.

சிங்களத்தேசியம் வேறு, தமிழ்த்தேசியம் வேறு என்ற யதார்த்தம் உரைக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்மக்களின் தேசிய விடுதலை இயக்கமான விடுதலைப் புலிகள் இயக்கத்தை, பிரித்தானிய அரசு பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இட்டு தடைசெய்யக்கூடாது என, தமிழர்தேசம் ஒருமித்துக் குரல்கொடுத்தது. இதற்காகப் பலபோராட்டங்களை அது நடத்தியது.

சிங்களப் பேரினவாதமோ விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு குரல்கொடுத்தது. இறுதியில், தமிழர்தேசத்தின் குரலுக்குச் செவிசாய்க்க மறுத்த பிரித்தானியா சிங்களப் பேரினவாதத்தின் நியாயமற்ற கோரிக்கைக்குத் தலைசாய்த்தது. பிரித்தானியாவில் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கும் பிரயத்தனத்தில், சிங்களப்பேரினவாதம் வெற்றிபெற்றது.

இது [illegible] உலக விடுதலைப் போராட்ட வரலாறுகள், சந்தித்த சந்திக்கும் சவால்களே இவை. ஒடுக்கப்படும் மக்களிற்காகப் போராடி வரும் விடுதலை அமைப்புக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளே இவை. பயக்கரவாத அமைப்புக்களாகச் சித்தரிக்கப்படும் அமைப்புகள் பிறிதொரு காலத்தில் விடுதலை இயக்கங்களாக ஏற்றுக் கொள்ளப்படுவதும், பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்படும் போராட்டத்தலைவர்கள், பின்னர் சமாதானத்திற்காக உழைத்த சிறந்த மனிதர்களாக வர்ணிக்கப்பட்டு, நோபல் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்படுவதையும் உலகம் பார்த்துவருகின்றது.

விடுதலைப் புலிகள், மூன்று தடவைகளாக போர்நிறுத்த நீடிப்பைச் செய்து, தமது சமாதானத்திற்கான நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி நிற்க, சிறீலங்கா அரசோ, விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக உலகநாடுகளை பிரகடனம் செய்யவைப்பதே தனது பிரதான கடமையென எண்ணிச் செயற்பட்டுவருகின்றது. போரைத் தொடர்ந்து நடத்திக்கொண்டும், இனமுரண்பாட்டை மேலும் கூர்மையடையச்செய்யும் இத்தகைய காரியங்களையும் செய்துகொண்டும், சிறீலங்கா அரசு சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக அடிக்கடி அறிவித்தும் வருகின்றது.

பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்தி, நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்கி, பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முனைப்புகளைப் புறந்தள்ளிவிட்டு, தமிழ் சிங்கள தேசிய இனங்கள் மத்தியிலான பிளவை மேலும் அதிகரிக்கச் செய்யும் காரியங்களே நடைபெற்றுவருகின்றன.

பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகளைத் தடைசெய்திருப்பது குறித்து, சிங்களப்பேரினவாதப் பெருங்குட்டையில் ஊறித்திளைத்த அனைத்து அரசியல் கட்சிகளும், பேரினவாத சக்திகளும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளன.

படையினருக்கான ஆட்சேர்ப்பும், தலைமறைவான படையினருக்காக அறிவிக்கப்பட்டிருக்கும் பொதுமன்னிப்பும், ஆயுதபேரங்களும் சிறீலங்கா அரசு, இராணுவக் கடும்போக்கில் மிகவும் தீவிர ஆர்வம் கொண்டிருப்பதை வெளிப்படுத்துகின்றது. பிரித்தானிய அரசின் விடுதலைப் புலிகளுக்கெதிரான தடையையும், அது தன் இராணுவ அழிவுப்பாதைக்குக் கிடைத்த அங்கீகாரமாகக் கருதிக் கொண்டு, தன் யுத்த முனைப்புக்களை தீவிரப்படுத்தக்கூடும்.

எது எப்படியிருப்பினும், தமது விடுதலைக்கும் விமோசனத்திற்குமாக தசாப்தங்களாக, இரத்தம் சிந்தியும், உயிர்விலை கொடுத்தும், அளப்பரிய தியாகங்களைப் புரிந்தும் போராடிவரும் தமிழீழ மக்கள், தமது சுதந்திர வாழ்விற்கு விடுக்கப்படும் அனைத்துச் சவால்களையும் எதிர்கொண்டு முறியடிப்பர், வெற்றிகொள்வர். ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# படிக்கிறது தேவாரம் இடிக்கிறது சிவன்கோவில்

அண்மையில் ஒரு புதுமையான நகைச்சுவைச் செய்தி வெளிவந்தது. இந்த நகைச்சுவைச் செய்திக்குப் பொறுப்பானவர் மட்டக்களப்பு 233ஆம் படைப்பிரிவின் கட்டளையதிகாரி, கேணல் வி.எல். றோகான் அந்தோனி.

செய்தித்துறை மீதும் பத்திரிகையாளர் மீதும் அதீத மரியாதை கொண்டிருப்பதாக அவர் தெரிவித்த கருத்துக்கள், பத்திரிகையாளர்களுக்குச் சற்று சிரிப்புமூட்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. கடந்த 26ம் திகதி, மட்டக்களப்பில், பாடசாலை அதிபர்கள், மற்றும் உள்ளூர்ப் பத்திரிகையாளர்களை அழைத்துக் கூட்டம் நடத்தியபோதே அவர் இந்த நகைச்சுவைத் தனமான கருத்தைத் தெரிவித்திருக்கின்றார். மட்டக்களப்பில், பொங்குதமிழ் எழுச்சி நிகழ்ச்சி நடத்தி வரும் மாணவர்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருங்கள் அல்லது விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும் என்று எச்சரிக்கை செய்ய கூட்டப்பட்ட கூட்டம் இது.

போரை நிறுத்தி பேச்சுவார்த்தை நடத்து எனவும், தமிழ்மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமை மற்றும் தாயகம், இனத்துவ அடையாளம் அங்கீகரிக்கப்பட்டு, பேச்சுவார்த்தை மூலம் தீர்வு எட்டப்படவேண்டும் எனவும் வலியுறுத்தி வரும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்ச்சியை, அரசுக்கு எதிரான போராட்டம் என, கேணல் அந்தோனி வகைப்படுத்தியிருந்தார். சிறீலங்



காவில் தடை செய்யப்பட்ட புலிகளுக்காகச் செய்யப்படும் போராட்டம் இது எனத் தெரிவிக்கும் அவர், புலிகளுக்காக எப்படி போராட முடியும் எனக் கேட்கின்றார்.

சரி. இவைதான் அவர்களது வழமையான நிலைப்பாடு. போகட்டும்.

தாங்கள் ஒழுங்காக நடக்கின்றோம் என்பதை, தாங்களே அடிக்கடி உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டியிருக்கின்றது என்கிறார் கேணல் றோகான் அந்தோனி. செய்தியாளர்கள் இது விடயத்தில் தமக்கு நிரம்பவும் உதவுகின்றனர் என்கின்றார் அவர். தாம் ஒழுங்கான பாதையில் பயணம் செய்ய ஊடகத்துறை தமக்கு நிரம்பவும் உதவிசெய்கின்றது என்கின்றார் அவர். அதாவது தம்மை விமர்சிப்பதன் மூலம் தாம் ஒழுங்காகப் பயணம் செய்ய ஊடகத்துறையினர் உதவுகின்றனர் என்கிறார் அவர். அங்கு அழைக்கப்பட்டிருந்த வீரகேசரி, தினக்குரல், மற்றும் தமிழ்ப் பத்திரிகைகளைச் சேர்ந்த செய்தியாளர்களால் சிரிப்பை அடக்கிக்கொள்வது மிகவும் சிரமமாக இருந்திருக்கும். சிங்கள அரசின் செய்தித் தடையும், சிங்கள இராணுவக் கொடுமைகளை வெளிப்படுத்தும் செய்தியாளர்கள் படுகொலைகள், தமிழ்ச் செய்தியாளர்கள் கைதுகள், தடுத்து வைத்துச் சித்திரவதைகள், தமிழ்ப்பத்திரிகைகள் சீல் வைப்பு என, சிங்களப்படையின் கைகளில் சிக்கி, ஊடகத்துறை அதிலும் குறிப்பாக தமிழ் ஊடகத்துறையினர் அல்லோல கல்லோலப்பட்டிருக்க... றோகான் அந்தோனி இப்படித் தெரிவித்திருக்கின்றார். சிரிப்பைக் கிளறும் செய்தி தான் கூடவே எரிச்சலையும். ■



38-kalaththil 2001.jpg

# நாடுகளும் முரண்பாடுகளும் பிரித்தானிய பயங்கரவாதத் தடைச்சட்டமும்



ஜோர்ஜ் வாசிங்டன்

பிரான்சிஸ் மரியோன் அமெரிக்கப் புரட்சிப் போரில் ஒரு சிறந்த யுத்த வீரர். கைது செய்யப்பட முடியாத அளவிற்கு அவர் தப்பி வந்ததால் அவரை நனைந்த நரி என்ற பட்டப்பெயரால் பிரித்தானியர்கள் அழைத்தனர். இந்த பிரான்சிஸ் மரியோனின் நேரடிவாரிசு கடந்த ஏப்பரல் மாதம் 24ஆம் திகதி அமெரிக்க இலங்கைத் தமிழ்ச் சங்கத்திற்கு எழுதியது.

"ஆனையிறவு வெற்றிக்கும், சிறந்த இணையத்தளத்திற்கும் எனது வாழ்த்துக்கள். அமெரிக்கப் புரட்சியிலும், அமெரிக்க விடுதலைப் பிரகடனத்திலும் புலிகளை வேரூன்றி நோக்கிய அமெரிக்கனாகிய நான் புலிகளை வாழ்த்தாமல் இருக்க முடியாது. விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்றால், ஜோர்ஜ் வாசிங்டன், பென் பிராங்கிளின், தோமஸ் ஜெபர்சன், எனது பாட்டனார் வழி மாமனாரான நனைந்த நரி என்றழைக்கப்பட்ட பிரான்சிஸ் மரியோன் கூடப் பயங்கரவாதிதான்"

இப்போது விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டியுள்ள ஐக்கிய இராச்சியம், ஜோர்ஜ் வாசிங்டன், பென் பிராங்கிளின், தோமஸ் ஜெபர்சன், பிரான்சிஸ் மரியோன் இவர்களையும் அதே தூரிகையால் கரி பூசியுள்ளது. உண்மையிலேயே 1776இல் ஐம்பத்தாறு அமெரிக்க விடுதலை வீரர்களையும், குறிப்பிட்டு பிணமாக அல்லது உயிரோடு தேடியது பிரித்தானியா. அவர்கள் செய்த குற்றம், அமெரிக்க விடுதலைப் பிரகடனத்தில் கையெழுத்து இட்டது.



நெல்சன் மண்டேலா

தமிழர்கள் இலங்கைத் தீவில் நடத்தும் விடுதலைப் போராட்டத்தை, அமெரிக்க விடுதலைப் போராட்டத்தோடு ஒப்பிட்டு பெருமை பாராட்டுவதற்குள் இதில் இருக்கும் சிலேடையை கண்டு கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அதாவது புலிகளும், இந்த 56 அமெரிக்க வீரர்கள் போராடிப் பிரகடனம் செய்ததை ஒத்த, ஒரு குறிக்கோளுக்காகப் போராடும் ஒரு அமைப்பு.

ஒரு அரசியலைக் கைகழுவி, இன்னும் ஒரு அரசியலுக்கு கைமாறுவது மனித வரலாற்றில் எப்பொழுது ஒரு இனமக்களுக்கு அவசியமாகிறதோ, உலகின் சக்திகள் மத்தியில், இயற்கையின் நியதியும், இயற்கையின் கடவுளும் அவர்களுக்கு அளித்த சமத்துவத்தையும், தனித்துவத்தையும் பெற, மாண்புடன் பிரியும் பிரகடனத்தைச் செய்வதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

200 வருடங்களுக்குப் பிறகு 14ஆம் திகதி மே மாதம் 1976ஆம் ஆண்டு தமிழீழ மக்களும் பிரிவினை கோரத் தூண்டும் ஒரு பிரகடனத்தை அறிவித்து, அமெரிக்கர்களைப் போல் யுத்தத்தில் இறங்கினார்கள். உலகின் சக்திகள் மத்தியில், இயற்கையின் நியதியும், இயற்கையின் கடவுளும் அவர்களுக்கு அளித்த சமத்துவத்தையும், தனித்துவத்தையும் பெற யுத்தம் செய்தார்கள். இந்த யுத்தத்தைதான் பிரித்தானிய அரசாங்கம் பயங்கரவாதம் என்று பெயர் சூட்டியுள்ளது. இதே பிரித்தானியாதான், (அமெரிக்க) முன்னைய யுத்தத்தையும் சட்டவிரோதம் என்றது.

மனித சரித்திரத்தில் அதிகாரத்தை எதிர்த்தவர்களை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்துவது புதிததல்ல. 18ஆம் நூற்றாண்டில் இருந்து, பிரெஞ் ஜக்கோப்பியன் எதிர்ப்புக் குழுவுக்கு எதிராக முதன்முறையாக பாவிக்கப்பட்டதில் இருந்து, மேலும் மேலும் அரசாங்கங்கள் தங்களை எதிர்ப்பவர்களை, அவர்கள் வன்முறையில் ஈடுபடாவிட்டால்கூட அவர்களைப் பயங்கரவாதிகள் என்று அழைப்பது சாதாரணமாகிவிட்டது. நாஜி மூன்றாவது றைக் என்கிற ஜேர்மன் அரசு தன்னை எதிர்த்தவர்களை பயங்கரவாதிகள் என்றது. பிரித்தானியர்களுக்கு இந்திய விடுதலை இயக்கம் பயங்கரவாதம், தென்னாபிரிக்க வெள்ளை இன அரசுக்கு மனிதஉரிமைக்காகப் போராடியவர்கள் பயங்கரவாதிகள். பிரித்தானியா இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்தியிருக்கின்றது. எல்லா அரசியல், சமய, கொள்கை சம்பந்தமான வலோற்கார நடவடிக்கையையும் பயங்கரவாதம் எனப் பெயரிட்டுள்ளது. இந்தச் சட்டத்தை வரையறுத்தவர்கள் மனிதசமுதாயத்தில் வன்முறை இல்லாமல் எந்த மாற்றமும் நடைபெறவில்லை என்பதை அவதானிக்கவில்லை. அது பெண்களுக்கான வாக்குரிமையாக இருக்கலாம், அடிமைகள் ஒழிப்பாக இருக்கலாம். இந்தச்சட்டம் அன்று இருந்திருந்தால் இந்தப் போராட்டங்கள் எல்லாம் பயங்கரவாதமாகவும், இதை ஆதரித்தவர்கள் எல்லாம் பயங்கரவாதிகளாகவும் இருந்திருப்பார்கள்.



பிரான்சிஸ் மரியோன்

இந்தப் புதிய சட்டத்தின் கீழ் 1773ஆம் ஆண்டு டிசெம்பர் 16ஆம் திகதி பொஸ்ரன் தேனீர் விருந்தின்போது, அமெரிக்கர்கள், பிரித்தானிய கிழக்கிந்தியக் கொம்பனித் தேயிலையை பொஸ்ரன் துறைமுகத்தில் கொட்டியதை, பயங்கரவாதம் என்றிருந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால், அதற்கு ஒத்த சொல்லில்தான் அப்பொழுது அதை அழைத்தார்கள்.

சாத்விகப் போராட்டத்தினால் தீர்க்க முடியாததை வன்முறையால் சாதிக்க தேசிய இனங்கள் முற்படுகிறார்கள் என்பதை பிரித்தானிய சட்டவரைஞர்கள் மறந்துவிட்டார்கள். பெண் வாக்குரிமைக்காகப் போராடியவர்கள், சாத்வீகவழியில் பல வருடங்கள் முயன்றும் முடியாமல் தீ வைப்பினால் சாதித்தார்கள். 30வருடங்களாக சாத்வீக வழியில் போராடிய போதெல்லாம் திருப்பித்தாக்கப்பட்ட தமிழர்கள் வேறுவழியின்றி ஆயுதப் போராட்டத்தில் இறங்கியிருக்கின்றார்கள்.


இன்றைய நிலையில் பேராசைபிடித்த தொழில்நிறுவனங்களில் இருந்து சூழலைப் பாதுகாப்பதற்கு ஆர்ப்பாட்டத்தில் இறங்கவேண்டியிருக்கின்றது. இப்படியான வன்முறையில் ஈடுபடுபவர்கள் சுற்றாடல் பயங்கரவாதிகள் என்று அழைக்கப்படுகின்றார்கள். இந்தக் குற்றச்செயலில் ஈடுபடும் தொழில்நிறுவனங்கள் சுற்றாடல் பயங்கரவாதிகள் என்ற பதத்தை நடைமுறைக்குக் கொண்டுவர பெரும்பாடுபட்டு இன்று வெற்றியும் கண்டுவிட்டார்கள். அரசியல் எதிர்ப்பில் சொத்துக்களை அழிப்பது, இன்றைய பிரித்தானிய சட்டத்தின் கீழ் பயங்கரவாதம் எனப்படுகின்றது.

இதை எல்லாம் கூறி குற்றச்செயல்களை எல்லாம் நாம் நியாயப்படுத்த வரவில்லை, விமானக்கடத்தல், வங்கிப் பணக்கொள்ளை, ரோக்கியோவின் நச்சுவாயு மதக் கொலை இவை எல்லாம் பயங்கரவாதம் தண்டிக்கப்பட வேண்டியவை. அதேபோல் பொதுமக்கள் மத்தியில் குண்டுவீச ஆயுதப்படையினரைப் பணிக்கும் அரசாங்கங்கள், ஆயுதப்படையினரால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள், பாலியல் வன்வதைகள், கொலைகள் இவையெல்லாம் பயங்கரவாதங்களாக தண்டிக்கப்பட வேண்டியவை. நாம் இங்கு கண்டிக்க விரும்புவது என்னவென்றால், பிரித்தானிய அரசாங்கம், நியாயமான உரிமைக்காகப் போராடுபவர்களை குற்றவாளிகள் ஆக்குகின்றது. மனிதவர்க்க முன்னேற்றங்களுக்கு மத்தியிலும், அரசாங்கங்கள் தங்களை எதிர்ப்பவர்களை நடத்துவதில் (குறிப்பாக பட்டம் சூட்டுவதில்) காலம் காலமாக ஒரேமாதிரியாக நடந்து கொள்கிறார்கள்.

புலிகள் நம்பிக்கை இழந்துவிடக்கூடாது. என்னதான் இருந்தாலும் புலிகள் ஜோர்ஜ் வாசிங்டன், பெஞ்சமின் பிராங்கிளின், தோமஸ் ஜெபர்சன், மகாத்மா காந்தி, எமலீன் பங்கஸ்ற், மௌசசொம் பேகின், சுபாஸ் சந்திரபோஸ், பகத்சிங், நெல்சன் மண்டேலா வரிசையில் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். ■

நன்றி www.sangam.org

# மீண்டும் ஒரு வெற்றிக்கிண்ணம்



மனித உரிமை மீறல் சம்பவங்களிலும், மனைதுசெய்யப்பட்டுபிறகு காணாமல்போகும் சம்பவங்களிலும், சிறீலங்கா முதல்வரிசை நாடுகளில் இடம்பிடித்திருக்கின்றது என்பது ஏற்கெனவே வெளிவந்த செய்தி. தற்போது அதற்கு மற்றுமொரு விடயத்தில் முதன்மை ஸ்தானம் வழங்கப்பட்டிருக்கின்றது. படையை விட்டு தலைமறைவானோருக்கு, மீண்டும் மீண்டும் பொதுமன்னிப்புவழங்கும் ஒரே நாடு சிறீலங்காவே என்ற சிறப்பையும் அது தற்போது பெற்றிருக்கின்றது.

சந்திரிகா அரசு, 1994ம் ஆண்டு ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் பின்னர், தலைமறைவான படையினருக்கு பதின்மூன்று முறை பொதுமன்னிப்பு வழங்கும் அறிவித்தலை விடுத்திருக்கின்றது. ஒவ்வொரு பொதுமன்னிப்புக் காலத்தின்போதும், இரண்டாயிரம்பேர்... மூவாயிரம் பேர்... நாலாயிரம் பேர் மீண்டும் படையில் இணைந்து கொண்டனர் என, சிறீலங்காப் பாதுகாப்பமைச்சகம், தெரிவித்துவருகின்றபோதும், தலைமறைவாகியிருப்போர் எண்ணிக்கை இருபத்தையாயிரமாகவே தொடர்ந்து இருந்துவருவதுதான் புதுமையானது.

கடந்த காலங்களில் தம்மால் அறிவிக்கப்பட்ட பொதுமன்னிப்புக் காலத்தில், தப்பியோடிய படையினரில் நாற்பத்தி எட்டாயிரத்தி ஐநூறு பேர் சரணடைந்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கின்றார் சிறீலங்காவின் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்தின.

பதின்மூன்றாவது தடவையாக, கடந்த ஆறாம் திகதியும் தப்பியோடிய படையினருக்கான பொதுமன்னிப்பு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. தொடர்ந்து தலைமறைவாகியிருப்போர் எண்ணிக்கை இருபத்தையாயிரம் என, தற்போதும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஒன்பது நாட்கள்வரை தொடரும் இப்பொதுமன்னிப்புக்காலத்தில் சரணடைய மறுப்பவர்களை, தேடிக்கைதுசெய்யும் நடவடிக்கைக்கும் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

'நாங்கள் ஆட்பற்றாக்குறையில் இருக்கின்றோம் அதனால் அவர்களை மீளப்பெறுவது நமக்குத் தேவையாக இருக்கின்றது' என்கிறார் சிறீலங்காவின் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்ல. ■

# பின்னடைவுகள் யாருக்கு?

'போரின் மூலமே தீர்வு' எனும் கோட்பாட்டை தாரக மந்திரமாகக் கொண்டு அரசியல் நடாத்தி வருகின்றது சிங்களப் பேரினவாதம். இக் கூற்றுக்கு உயிர்கொடுத்து, அவ்வப்போது பெரும் எதிர்பார்ப்புக் கனவுகளோடு பல்வேறு இராணுவ நடவடிக்கைகளை இவர்கள் மேற்கொள்வது வழமை. சில வேளைகளில் தமிழீழத் தேசிய விடுதலை இராணுவமாகிய புலிகள் சில தந்திரோபாயப் பின்நகர்வுகளை மேற்கொள்வர். அவ்வேளையிலெல்லாம் இப்பின்நகர்வுகளை புலிகளுக்கு ஏற்பட்ட பலவீனங்களின் வெளிப்பாடாக வெளியுலகிற்கும் தனது இராணுவத்தின் மத்தியிலும் தீவிரமாகப் பறைசாற்றி வருகின்றது சந்திரிகா அரசு.

இலங்கைத்தீவில் பல வருடங்களாக கொழுந்து விட்டெரிகின்ற இனச்சிக்கலை முடிவுக்குக் கொண்டு வருமுகமாக வெளிநாட்டுக் குழுவொன்று முயற்சி செய்துவருகின்றது. இம்முன் முயற்சிகளுக்கு நல்லதொரு சமிக்ஞையாக ஒரு மாதகால யுத்தநிறுத்தமொன்றிற்குத் தலைவர் பிரபாகரன் அவர்கள் முன்வந்தார். தேவையேற்படின் அமைதிப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படுமாயின் யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கவும் தலைவர் சம்மதம் தெரிவித்திருந்தார்.

ஆயினும், பேரினவாதக் கொள்கையைப் பற்றிப்பிடித்திருக்கும் பௌத்த சிங்கள அரசும் அதோடிணைந்த பல அமைப்புக்களும், இந்த நல்லெண்ண சமிக்ஞையை கேலி செய்தும், புலிகள் பலமிழந்துவிட்டார்கள், தம்மை மீளமைத்துக்கொள்வதற்காகவே, மேற்படி யுத்தநிறுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்றார்களெனவும் கூறுரைத்தார்கள். பிழையான கற்பிதங்களைப் புனைந்துகொண்டு, பலத்தைத் தீர்மானிக்கின்ற சக்திகள் தாமே எனும் இறுமாப்பில் திளைக்கின்றது சிங்களப் பேரினவாதம்.

உண்மையில் யார் பலமிழந்துள்ளார்கள், எவ்வாறு, எப்போது பலமிழந்துள்ளார்கள்? இக்கூற்றுக்களுக்கு பின்னாலுள்ள பெரும் உண்மைகளை கடந்தகால அனுபவங்களிலிருந்தும், படிப்பினைகளிலிருந்தும் அறிந்திருந்த போதிலும், விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லையெனும் பாங்



கில் கதையளக்கும் இவர்களின் பிழையான வாதப்பிரதாபங்களை என்னவென்று சொல்வது. யுத்ததந்திரோபாயங்களுக்கு ஏற்றவாறும் சர்வதேச மட்டத்தில் ஏற்பட்டுள்ள நல்லெண்ண அபிப்பிராயமாகிய புலிகளின் யுத்தநிறுத்தச் செயற்பாட்டில் தாம் கொண்டுள்ள அக்கறையில் களங்கம் ஏற்படுத்தாத விதத்திலும் பின் நகர்வுகளை மேற்கொண்ட புலிகளை பலவீனமடைந்துவிட்டார்கள் என்று சித்தரித்து நிற்பதானது உண்மையில் கேலிக்கிடமானதொரு விடயமாகவே உள்ளது.

ஏனெனில் இப்படியான தப்பான கற்பிதங்களைச் செய்துகொண்டுதான் சிங்கள அரசு முன்னரும் மிதமிஞ்சிய கற்பனைகளில் மிதந்தது. யாழ். குடாநாடு முற்றுமுழுதாக ஆக்கிரமிக்கப்பட்டபோதும், புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பைச் சீர்குலைக்கவும், தமிழர் தாயகப் பிரதேசங்களைக் கூறுபோடும் விதமாக பல்வேறுபட்ட பெயர்சூட்டலுடன் தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் பின்னாலும், கிடைத்த சில வெற்றிகளையெல்லாம் பெரியதொருவெற்றிப்படிகளாகச் சித்தரித்தது அரசு. அத்தோடு, புலிகள் முற்றுமுழுதாக ஒடுக்கப்பட்டுவிட்டார்கள், இனி அவர்களினால் நிமிர முடியாதென்றும் கொக்கரித்து நின்றனர். ஆயினும், நடந்ததென்ன? சிங்களம் கற்றுக்கொண்ட பாடம்தான் என்ன?

ஒடுக்குமுறைக்கெதிராக இழந்த தம் அதிகார ஆட்சிக்-கட்டமைப்பை மீளக் கட்டியமைப்பதற்காக தமிழினம் போராடத் துணிந்தது. ஆரம்பக் காலகட்டம் முதல் பாரிய இராணுவ வெற்றிகளின் பின்னால் பலம் பொருந்திய இனமாகத் தம்மை இனங்காட்டி இருக்கின்ற தற்போதைய காலகட்டம்வரை, விடுதலைப் புலிகள் எந்தவொரு சமாதான முன்னெடுப்பு முயற்சிகளிலும் கலந்துகொள்ளத் தவறவில்லை. ஆயினும், ஏதோவொரு வழியில் சிங்களப் பேரினவாதம் சமாதான முயற்சிகளை முறித்துக்கொண்டு போரே தீர்வு என்று நின்றபோதும், அக்கனவுகளைச் சிதறடித்து வியத்தகு-வெற்றிகளையும் பெற்று நிற்கின்றது தமிழினம்.

## வரலாற்றில் கற்றுக்கொள்ள மறந்தவை..

இப்படியாக 1987ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு முதல் ஒத்திகை வித்தாக நடாத்தப்பட்ட ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கையினை தலைவர் அவர்கள் [illegible] முறியடித்தார். மேலும், இதைப்போன்ற பல [illegible] நடவடிக்கைகளின் போதெல்லாம் இனி முடியாதென சர்வதேசமே நினைக்குமளவிற்கு போர்வியூகம் அரச படையினர் பக்கம் சார்ந்திருப்பது போன்ற நிலை வெளிப்பட்டபோதும், தலைவர் அவர்கள் காலத்துக்குக் காலம் மாற்றியமைக்கப்பட்ட தாக்குதல் திட்டங்கள் மூலமும் மக்கள்பலம் மூலமும் முறியடித்தார். அதுமட்டுமன்றி உலக நாடுகளே வாயைப்பிளக்குமளவிற்கு ஒன்றிணைக்கப்பட்ட மக்களெழுச்சி எனும் பெரும்பலம் மூலம் பெரியளவிலான படைத்துறை, அரசியல் மாற்றங்களை தற்காலத்தில் ஓயாத அலைகள் தாக்குதல்கள் மூலம் நிலைநிறுத்தியுள்ளார் அவர்.

இருந்தபோதிலும், போரில் மிகக் கடுமையான தோல்விகளைச் சந்தித்த அரசு அத்தோல்விகளுக்கு பொறுப்பற்ற இராணுவத் தளபதிகளையும், ஆயுததளபாட பற்றாக்குறையினையுமே சாட்டாகமுன்வைத்தது. சர்வதேசத்திடம் மண்டியிட்டு பெரும் கடன் அடிப்படையில் இராணுவ ஆயுததளபாடங்களை அள்ளிவந்து படையினரிடம் கையளித்து புதிய தெம்பூட்டி மீண்டும் போரின் மூலமே சாதிக்கமுடியுமென்று நிற்கின்றமையானது உண்மையில் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படும் நிகழ்விற்கு ஒப்பானதொன்றாகவே இருக்கின்றது. இப்படியாக படையினர் மத்தியில் வசதி வாய்ப்புக்களையும், பெரும் சலுகைகளையும் அறிமுகப்படுத்தி நவீனரக ஆயுதங்களை கையளித்ததன் மூலம் அப்படைகளால் ஏதேனும் பெரிதாய் சாதிக்க முடிந்ததா? ஓயாத அலைகள் வெற்றித் தாக்குதல் நடவடிக்கை மூலம் மீட்கப்பட்ட யாழ். குடாவின் பாகங்களில் 6 மாத காலத்திற்கு மேலாய் நிலைகொண்டிருந்தனர் புலிகள். அவர்கள் மேல் பன்னிரண்டு பெரும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் இந்நவீனரக ஆயுதங்களைக் கொண்டும், ஆளணிப் பெருக்கத்தின் மூலமும் வெல்ல முடியாது அரச படைகள் திணறின. சமாதான முயற்சியில் அதீத அக்கறையோடு செயலார்வம் காட்டிவரும் தலைவர் பிரபாகரன் அவர்கள் யுத்த தந்திரோபாயங்களுக்கு ஏற்பவும் இவ்வளவு காலமும் சர்வதேசத்தின்பால் வெளிப்படுத்தப்பட்டு வந்த புலிகளே போர் விரும்பிகள் எனும் குற்றச்சாட்டுக்களை தவிடுபொடியாக்கும் விதமாகவும் தாம் மீட்டெடுத்த எம் தாயகப் பிரதேசங்கள் சிலவற்றிலிருந்து புலிகளை விலக்கிக் கொண்டார். இப்பின்நகர்வுகளின் பின்னரான நாட்களில் இந்த இடங்களை ஆக்கிரமித்துக் கொண்ட அரச படைகள் பெரும் போர் ஒன்றின் மூலமே புலிகள் விரட்டப்பட்டார்கள் என்றும், தம்முடைய பலத்தின் பிரதிபலிப்பே இவ்வெற்றிக்குக் காரணமெனவும் தம்பட்டம் அடித்து நிற்கின்றமை சிரிப்பிற்கிடமானதொருவிடயமே.

சிறுகச் சிறுக வளர்ச்சியுற்று இன்று பரிணாம வளர்ச்சி பெற்றிருக்கும் தமிழ்த் தேசிய இராணுவப் படையின் பலமோ உறுதியான நிலையிலுள்ளது. புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என அரசை மூன்றாம் தரப்பு நாடுகள் வற்புறுத்துவதற்கும் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் வன்னிக்கு வந்து பேச்சுக்களை நடத்தியுள்ளமைக்கும் இப்பலமான நிலையே காரணமாகும்.

இப்படியானதொரு நிலைமையினைத் தோற்றுவிப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணம்தான் என்ன? எனப் பார்த்தால், ஒன்றிணைக்கப்பட்ட மக்களெழுச்சியின் பயனாய் புலிகள் பெற்றுவிட்ட வெற்றிகளின் பயனே எனலாம். இவ்வுண்மையை அரச பயங்கரவாதிகள் ஏற்றுக்கொள்ள மறுப்பினும் வரலாறு சுட்டிநிற்கும் பாடங்களை சர்வதேசமும் புரிந்துகொண்டதன் வெளிப்பாடாகவே புலிகளை பயங்கரவாதப் பட்டியலிட்ட வல்லரசு நாடுகள் சில அனுசரணை நாடாக செயற்படும் நோர்வேக்கு பேச்சுவார்த்தை சம்பந்தமாக சில ஆலோசனைகளையும் ஊக்குவிப்புக்களையும் செய்துவருகின்றன.

யுத்தநிறுத்த அமைதியில் ஈடுபடுவதோடு, சமாதான முயற்சிகளுக்கு சாவுமணி அடிக்கும் பல விபரீதமான செயற்பாடுகளில் ஆர்வங்காட்டி வருகின்றது சந்திரிகா அரசு. ஒருபக்கம் தாமும் சமாதானப் பேச்சுக்குத் தயார் எனப் போக்குக் காட்டியவாறு, மறுபுறம் கடன் அடிப்படையில் பெரும் தொகை ஆயுத தளபாடங்களையும், கப்பல், விமானங்களையும் கொள்வனவு செய்வதிலும், இராணுவத்திற்குப் புதியவர்களை இணைப்பதிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது. ஒட்டுமொத்தத்தில் போரையே மார்க்கமாகத் தரித்துக்கொண்ட இவர்களின் இச்செயற்பாடுகளிலிருந்து போர் முடிவுறப்போவதில்லை என்பது நிதர்சனமாகி நிற்கின்றது. ஆகவே, நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய கடமைப்பாடும் தமிழர் பக்கமுள்ளதென்பதை மறந்துவிடலாகாது.

வெறும் சமாதானக் கனவுகளில் திளைப்பதை விடுத்து நாம் எம்மேல் திணிக்கப்படப்போகின்ற கொடியபோரை துணிந்தெதிர்கொள்ளத் தயார்ப்படுத்தல்களில் ஈடுபட வேண்டும். அதற்காக நாமும் யுத்த வெறிகொண்டவர்கள் எனக் கொள்ள முடியாது. ஏனெனில், கடந்தகால கசப்பான அனுபவங்கள் பல எங்களுக்கு அறிவுறுத்தி நிற்கின்றன. பேரினவாதச் சிங்கள அரசானது தனது மேலாதிக்கக் கனவுகளிலிருந்து உண்மையான தார்மீக வழியில் எமை அணுகும்வரை எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளத் தயாராவதோடு, எதிர்வரும் சவால்களுக்கு முகங்கொடுக்கவும் தொடர்ந்தும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். அதுவே எமது வரலாற்றுக் கடமையுமாகும்.

**அ. அன்ரனி**

# மண்ணும் மொழியும் எமக்கு இரு விழிகள்

எமது தாயகமான தமிழீழத்தை மீட்டெடுக்கக் களமமைத்துப் போராடி வீரங்களையும் சாகசங்களையும் புரிந்துவருவதுடன் தம் இன்னுயிரையும் தமிழீழ மண்மீட்பிற்காக ஈந்து வருகின்றனர் எம் தோழர்கள். எதிரிகளிடமிருந்து தமிழீழ மண்ணை மீட்கும் அதேவேளையில், எமது மொழியை வேற்றுமொழிகளின் ஊடுருவல்களிலிருந்து காப்பதிலும், கால மாற்றத்தின் தேவைக்கேற்ப எமது மொழியை வளப்படுத்தி வளர்த்தெடுப்பதிலும் நாம் கண்ணும் கருத்துமாய் இருத்தல் வேண்டும். சிலர், உலகிற் சிறந்த செம்மொழி எம்மொழி. அம்மொழியை எவரும் எதுவும் செய்துவிட முடியாது. அதை அழிக்க எவராலும் முடியாது என்று வீம்பு பேசிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால், உண்மை நிலை என்ன? நாம் பேசுகின்றபோதும், எழுதுகின்ற போதும் எமது மொழியில் ஏராளமான பிறமொழிச்சொற்கள் எம்மையறியாமலேயே எம்மாற் பயன்படுத்தப்படுகின்றன. சில பொழுதுகளில் நாம் பயன்படுத்தும் சில சொற்றொடர்கள் முழுக்க முழுக்கத் தமிழ் அல்லாத பிறமொழிச் சொற்களானவையாகவே அமைந்துவிடுகின்றன. ஆயினும் அவற்றை நாம் தமிழ்மொழிச் சொற்றொடர்கள் என்றே எண்ணிக்கொண்டிருக்கின்றோம். எம் தமிழ்மொழியில் வடசொற்கள் விரவியிருக்கின்றமையால் இவைதான் தமிழ்ச்சொற்கள் இவைதான் வடசொற்கள் என எம்மால் பிரித்தறிய இயலாதவாறு ஆகிவிட்டது.

தமிழ்மொழியிலேற்பட்ட பிறமொழிக் (வடமொழி) கலப்புக்களினாலேயே தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் ஆகிய மொழிகள் உருவாகியதுடன் பரந்த தமிழகமும், தமிழ்மொழியும், தமிழினமும் இன்று சிதைந்து சுருங்கிவிட்டன.

முடியுடை மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்களால் ஆளப்பட்ட தமிழ் மண்ணில் சேரமண் கடந்த சில நூற்றாண்டுகளுக்குள் மலையாள மண்ணாக, கேரளமண்ணாக மாறிவிட்டது. சேரநாட்டுத் தமிழ் மக்கள் மலையாளிகளாக மாறிவிட்டனர்.

தமிழ் மண்ணை மீட்கும் பணியிலே குதித்திருக்கும் நாம், எமது தாய்மொழியாம் தமிழ்மொழியைப் பேணிக்காக்கும் பொருட்டு எமது பேச்சிலும் எழுத்திலும் பிறமொழிக் கலப்பற்ற செந்தமிழையே தூயதமிழையே பயன்படுத்துவோம். எமது பெயர்களையும் எமது விற்பனை நிலையங்கள், அங்காடிகள், தொழிற்கூடங்கள், இலக்கியமன்றங்கள், விளையாட்டுக் கழகங்கள் போன்றவற்றின் பெயர்களையும் தெருக்கள், குடியிருப்புக்களின் பெயர்களையும் செந்தமிழில் மட்டுமே அமைத்துக் கொள்வதென உறுதி செய்வோம். எமது நடைமுறையில் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்றும் தமிழ் எனச் செயற்படுவோம். இல்லையேல் நாம் தமிழீழத்தை மீட்டபின்பு தமிழை இழந்துவிடுவோம். எம் இரு விழிகளில் ஒன்றை இழந்தவராவோம். ■

# பறிக்கப்பட்ட பாரம்பரிய வாழிடங்கள்

சிங்களப் பேரினவாதமானது தமிழர்களுடைய உரிமைக் கோரிக்கையினைச் சிதறடிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. அதில் குறிப்பிடத்தக்கது என்னவெனில் தமிழர்களினது பாரம்பரியத் தாயகம் என்று குறிப்பிடப்படும் பிரதேசங்களில் தமிழர்களை இல்லாதொழிப்பதையே பிரதானநோக்காக் கொண்டு சிங்களப் பேரினவாதம் தனது அரச நிர்வாக இராணுவ இயந்திரத்தைப் பயன்படுத்தி வருவது யாவரும் அறிந்ததே.

அந்தவகையில் தமிழர்களின் கலாச்சார மையம் எனப்படும் யாழ் குடாநாட்டின் 70ற்கும் மேற்பட்ட கிராமங்கள் இராணுவக்கிராமங்களாக மாற்றமடையும் அபாயநிலை தோன்றியுள்ளது.

தமிழீழ மக்களின் பாரம்பரிய கலாச்சார இறைநம்பிக்கை ஸ்தலங்களாக வர்ணிக்கப்படுகின்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முனீஸ்வரம், தொண்டேஸ்வரம் என்பன இன்று தமிழர்கள் சுதந்திரமாகச் சென்றுவர முடியாத இடங்களாக மாறிவிட்டன. மேற்குறிப்பிட்ட இடங்கள் வெறுமனே வழிபாட்டுத் தலங்கள் மாத்திரமல்ல தமிழர்களின் பல்லாயிரம் ஆண்டு கால வரலாற்றை உறுதிப்படுத்துகின்ற வரலாற்று மையங்களாக உள்ளமையே, சிங்களப் பேரினவாதம் ஆக்கிரமித்து நிற்கக் காரணமாகும்.

1983இல் காரைநகர் கடற்படைத் தளத்தை விஸ்தரிப்பதற்காக தமிழர்களின் பல வாழிடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. வடதமிழீழத்தின் ஒரேயொரு மீன்பிடிப் படகுத் தொழிற்சாலையான சீனோர் தொழிற்சாலையும் சிங்களக் கடற்படையால் கபளீகரம் செய்யப்பட்டு இன்று களபூமி வரை கடற்படைத்தளம் பரந்து விரிந்துள்ளது. மேலும் பல இடங்களை விஸ்தரிப்பதற்கான முயற்சியிலும் சிங்களக் கடற்படை ஈடுபட்டுள்ளது.

யாழ் குடாநாட்டின் வலிவடக்கு பிரதேசத்தில் வளம் நிறைந்த 65 கிராம சேவையாளர் பிரிவுகள் பலாலி விமானத்தளம் தொட்டு காங்கேசன்துறை கடற்படைத் தளம் வரையான பெரும் இராணுவ வலயத்திற்காக அபகரிக்கப்பட்டுள்ளன. தமிழர்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள் பலவும் இவ்வலயத்திற்குள் அகப்பட்டு சிங்களப் பேரினவாதத்திற்கு இரையாகி சிதைந்து போயுள்ளன. வலிவடக்குப் பகுதிகள் எங்கும் நிலைத்து ஆலமரமாய் விழுதுகள் பரப்பி வாழ்ந்த 65000 தமிழ்க்குடும்பங்கள் நிரந்தரமாக வீடற்றவர்களாக ஆக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

இதற்கு சிங்களத்தின் கூஜாதூக்கிகளாகவும், அடிவருடிகளாகவும் வலம்வந்து, அதற்குப் பிரதியுபகாரமாக அம்மையாரினால் வடக்குகிழக்கு புனர்வாழ்வு அமைச்சைப் பெற்றுள்ள ஈபிடிபி கூலிக்குழு முழு ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றது. வாழிடம் இழந்து நிர்க்கதியாக நிற்கும் தமிழ் மக்களுக்கு அற்பசொற்ப நஷ்டஈடுகளை வழங்கி அவர்களை வேறிடத்தில் குடியமர்த்தும் சுத்துமாத்து வேலைகளில் இறங்கியுள்ளது. இதனைக் கண்டிக்கும் தமிழின உணர்வாளர்களை ஈபிடிபி டக்ளஸ் தேவானந்தா மக்கள் நல்லா இருப்பதை விரும்பாதவர்கள் என்று கூறியிருப்பது விசித்திரமானதும் கேலிக்கிடமானதும் ஆகும். ஆண்டாண்டு காலமாக, பரம்பரையாக தமது விவசாய நிலங்களோடு வளமாக வாழ்ந்த மக்களை எழுப்பிய சிறீலங்கா இராணுவத்திற்கு துணைபுரியும் நடவடிக்கை இனக்கோடாரிக்காம்புகளின் இன்னொரு இனத்துரோகமாகும்.

இதற்கு சிங்கள அரசும், ஈபிடிபிக் கூலிக் குழுவும் செய்யும் விளம்பரம் வெகு போக்கிரித்தனமானது. ஏதிலிகளாக இடம்பெயர்ந்தோர் தங்ககங்களில் வாழும் வலிவடக்கு வாழ் தமிழர்களை வேறு இடங்களில் காணி வாங்கிக் குடியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளதாம். இதற்குப் பெயர் தற்காலிக நிரந்தர முகாமாம். இங்கு குடிநீர், கழிப்பறைவசதிகள், விளையாட்டரங்கு, பொதுச்சந்தை, நூலகம், பாடசாலைகள் என்பன அமைக்கப்படும் எனவும் டக்ளசின் புனர்வாழ்வு அமைச்சு தமிழ்மக்களின் காதில் பூச்சுற்ற முற்பட்டுள்ளது. பாரம்பரிய மண்ணில் இருந்து ஆக்கிரமிப்பாளர்களால் வேரோடும் விழுதோடும் விரட்டப்பட்டவர்கள் தாம் பிறந்து வளர்ந்து சீவித்திருந்த நிலம் தவிர வேறெதனையும் விரும்புவாரோ. "வீர சுதந்திரம் வேண்டிநிற்கும் தமிழீழ மக்களின் உணர்வலைகள் துரோகக்கும்பலுக்குப் புரியாதது வியப்பேதுமில்லை. பத்து வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து வாழும் மக்கள் எங்கள் மண்ணில் எம்மை வாழ விடுங்கள் என்று கோருகின்றனரே ஒழிய எங்களுக்கு வேறு இடத்தில் வீடுதாருங்கள் பூங்கா தாருங்கள் என்று கேட்கவில்லை.

இன்று தெல்லிப்பளை அம்மன் ஆலயத்திற்கு அப்பாலும் தமிழர்களின் பாரம்பரிய வாழிடம் எச்சங்கள் ஏதுமற்று சிங்களஇராணுவத்தின் புல்டோசர்க்கரங்களால் வெட்டவெளியாக்கப்பட்டுள்ளது. புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்திக்கு அப்பாலும் இதேநிலைதான். வசாவிளான் சந்திக்கு அப்பால் சிங்கள இராணுவ நகரே உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு விகாரைகள், சிங்களப்பாடசாலைகள் என்பன கட்டியெழுப்பப்பட்டுள்ளன. இதனைவிட சிங்களக் காடையர்களை குடியேற்றும் திட்டம்கூட சிங்கள அரசிற்கு உள்ளது. அதன் ஒரு கட்டமாகவே பருத்தித்துறை இறங்குதுறைக்கு பொதியிறக்குவதற்கு சிங்களத் தொழிலாளிகள் கொண்டுவரப்பட்டிருந்தனர். ஓயாத அலைகள்-3 நடவடிக்கையின்போது இவர்கள் வெளியேறிவிட்டனர்.

இந்நடவடிக்கையை உறுதிப்படுத்துமாற் போல சிறீலங்கா இராணுவத்தளபதி ஜெனரல் பலகல்ல தொண்டர் ஸ்தாபனம் ஒன்றின் பிரதிநிதிக்குக் கூறிய கூற்றினை இங்கு மீளக் குறிப்பிடுவது சாலப்பொருத்தமானதாகும். சமாதானம் வந்தாலும் பாதுகாப்பு வலயத்திற்குள் மக்கள் குடியமர்வதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று குறிப்பிட்டுள்ளார். இவையெல்லாம் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை கபளீகரம் செய்வதையே சிங்களம் நோக்காகக் கொண்டுள்ளது என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது.

எமது இனம் வாழவேண்டுமானால், எமது தாயகத்தின் ஒவ்வொரு அங்குலமும் காப்பாற்றப்பட வேண்டும். இழந்த தரணியனைத்தும் மீண்டும் பெறப்பட வேண்டும். தாயகமீட்பிற்காக அனைத்துத் தமிழீழ மக்களும் அணிதிரண்டு பாடுபடுவதே எமது பாரம்பரிய நிலங்களில் நாம் நிம்மதியாக வாழ்வதற்கு உள்ள ஒரே வழியாகும். ■

# சிங்களத்து ஆட்சியாளரால் ஓரங்கட்டப்பட்ட பேரினவாதத் தளபதி

தமிழ் இளைஞர்கள் பலரின் சாவிற்கும், தமிழர்களின் பல கிராமங்கள் நாசமாக்கப்பட்டதிற்கும் காரணமாக இருந்த படையதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தமது 34 வருட சேவையின் பின்னர் கடந்த தை 31ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வு எனும் பெயரில் வீட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளார்.

ஜானக பெரேரா ஓர் சாதாரண அதிகாரி, அவரைப் போல எத்தனையோ பேர் இராணுவத்தில் உள்ளனர், என பத்திரிகையாளர் கேட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் சிறீலங்காவின் தொடர்புசாதன அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான அநுரா பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா ஓர் ஈவிரக்கமற்ற இனவாதி என்பதும் பெருமளவிலான தமிழ் மக்களின் படுகொலைகளுக்கும், தமிழர் தாயகமண் மீதான சீரழிவு நடவடிக்கைகளுக்கும் ஆக்கிரமிப்பிற்கும் காரணமானவர் என்பதும் கேள்விக்கோ அன்றிச் சந்தேகத்திற்கோ இடமற்றதொன்று. அது மாத்திரமல்ல 1988, 1989ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பி கிளர்ச்சியின்போது தென்னிலங்கையில் நடைபெற்ற பல ஆயிரக்கணக்கான படுகொலைகளுக்குக் காரணமாகவும் இருந்துள்ளார்.

இவ்வாறான உயிர்களைப் பறிப்பதில் ஈவிரக்கமற்ற இவ்வதிகாரி மீது சிங்களப் பேரினவாதம் அபரிதமான பற்றுக்கொண்டுள்ளது. காரணம் அவரது அனைத்துப் படையியல் செயல்பாடுகளும் சிங்களப் பேரினவாதத்தின் எண்ணக்கருக்களுக்கு செயலுருவம் கொடுப்பதாகவே இருந்து வந்துள்ளன. கொல்லாமையைக் கொன்றுவிட்டு தமிழரை இத்தீவிலிருந்து ஒழித்துக்கட்ட கங்கணம் கட்டிநிற்கும் சிங்களப் பௌத்த பேரினவாதத்திற்குப் பெரும் பாதுகாவலராக இருந்துள்ளார். பேரினவாதத்தின் தலையாய குறிக்கோள்களான தமிழர் தாயக ஆக்கிரமிப்பு, இனஅழிப்பு என்ற ரீதியில் அவரின் பங்கு என்றுமே மறுக்க முடியாத அளவிலும் இருந்துள்ளது.

சிறீலங்கா இராணுவத்தின் பரசூட் கொமாண்டோப் படையணியின் முதலாவது மேஜர் ஜெனரல் இவரென புகழாரம் சூட்டியுள்ளது பேரினவாத ஊதுகுழலான சண்டே ஒப்சேவர். அது மாத்திரமின்றி இவரது தமிழராழிப்பு நடவடிக்கைகளுக்காக ரண விக்கிரம பதக்கம் நான்கு தடவையும், ரணசூர பதக்கம் மூன்று தடவையும், விசிஷ்ட சேவா விபூஷணய, உத்தம சேவா பதக்கங்களையும் சிங்கள ஆட்சியாளர்கள் வழங்கிக் கௌரவப்படுத்தியுள்ளனர்.

மணலாற்றுப் பிரதேசத்தில் தமிழர்களின் பாரம்பரியக் கிராமங்களில் ஒன்றான மணல்கிண்டிமலைக் கிராமத்திற்கு ஜானகபுர எனப் பெயரிடும் அளவிற்கு ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றவாசிகளைப் பாதுகாப்பதில் அவர் முக்கியபங்கினை வகித்துள்ளார்.

இது ஒருபுறமிருக்க, சிறீலங்கா இராணுவத்தின் போரிடும் கூர்முனை என அழைக்கப்படும் சிறப்புப்படையணியான 53வது டிவிசன் உருவாக்கத்தில் ஜானக பெரேராவின் பங்கு கணிசமானதாகும். இச்சிறப்புப் படைப்பிரிவு ஆரம்பத்தில் ஒரு கொமாண்டோ அணியாக உருவாக்கப்பட்ட போது அதன் கட்டளை அதிகாரியாக ஐந்து வருடங்கள் இருந்து அதனைக்கட்டி அமைப்பதில் ஜானக பெரேராவின் பங்கு காத்திரமானதாக இருந்தது.

இதேசமயம் சிறீலங்கா இராணுவம் தனது வரலாற்றில் பெரு வெற்றி எனப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் ரிவிரச நடவடிக்கை ... சாலித்தனமானது அல்ல ... ஜெனரல் செனிவிரட்ண என்ற அப்போதைய யாழ்ப்பாணக் கட்டளை அதிகாரி விலகிக்கொள்ள அவரின் இடத்திற்கு ரத்வத்தையால் கொண்டு வரப்பட்டு ரிவிரச நடவடிக்கைக் கதாநாயகனாக சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தப்பட்டார். ரிவிரச நடவடிக்கையின்போது முக்கிய பங்காற்றி சந்திரிகாவினதும், ரத்வத்தையினதும் பேராசைகளுக்கு வலுச்சேர்த்தார்.

இவையாவும் ஒருபுறமிருக்க ஓயாத அலைகள் -3 நடவடிக்கையின்போது யாழ்-குடாநாடு விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி கண்டுவிடுமோ என்ற அச்சநிலை சிறீலங்கா அரசிற்கு ஏற்பட்ட வேளையில் உடனடியாக ஜனாதிபதி சந்திரிகாவின் விசேட பணிப்பில் யாழ் குடாநாட்டிற்கு அனுப்பப்பட்டார் ஜானக பெரேரா.

ஆனால் யாழ் குடாநாட்டினை சிறீலங்கா இராணுவம் தக்கவைத்துக் கொண்டமைக்கு ஜானக பெரேராவின் ஆற்றல் காரணம் அல்ல என்பது தமிழீழ மக்கள் நன்கறிவர்.



யாழ் குடாநாட்டில் சிறீலங்கா இராணுவத்தின் தோல்வியைத் தடுத்து நிறுத்தியது உலக நாடுகளிற் சில வழங்கிய ஒத்துழைப்பேயாகும். பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் ஏற்படுகின்ற களமுனைப் பின்னடைவுகளின்போது அவற்றிலிருந்து சிறீலங்காப் படைகளை மீட்டு வழிநடத்த வல்ல தளபதியாக கருதப்பட்டவர் ஜானக பெரேராவே ஆகும்.

இவ்வாறாக சிறீலங்கா இராணுவத்தின் வெற்றிகளுக்கும், தோல்விகளைத் தடுத்து நிறுத்துவதிலும் முக்கிய பங்காற்றியவராகக் கருதப்படும் ஒரு தளபதியை சாதாரணமானவர் என்றும் இவர் போன்று பலர் உள்ளனர் என்றும் பேசுவது சிறீலங்காவின் ஆட்சியில் உள்ளவர்களின் போக்கிரித்தனத்தையே காட்டுகின்றது. டென்சில் கொப்பேகடுவ தொட்டு, கிழக்கில் நடந்த படுகொலைகளுக்குக் காரியகர்த்தாவான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம வரைக்குமான பௌத்த பேரினவாதத்தைப் போற்றிப் பாதுகாத்தவர்களுக்கு சிங்கள ஆட்சியாளர்கள் வழங்கிய பரிசே இன்று சிங்களப் பேரினவாதத்தைப் பேணிப் பாதுகாக்கவல்ல தளபதியான மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவிற்கு நடந்தேறியுள்ளது.

ஜானக பெரேரா ஆளும்கட்சிக்கு வேண்டப்படாதவராக இப்போது போயிருக்கலாம். ஆளும்கட்சிக்கு எதிரானவராக இருக்கலாம். ஆனால் அவர் ஆளும்கட்சியின் பேரினவாதக் கொள்கைகளுக்கும், இன அழிப்பு நடவடிக்கைகளுக்கும் விரோதமானவராக இருந்ததில்லை. ஆகவேதான் சிங்கள ஆட்சியாளர்கள் கறிவேப்பிலை போன்று தமது அரசியல் லாபங்களுக்குச் சிங்களத்து அதிகாரிகளைப் பயன்படுத்தி அவர்களை ஓரம்கட்டுவதும் அவமானப்படுத்துவதும் போக்கிரித்தனமாகும்.

ஜானக பெரேராவின் வீழ்ச்சி தமிழீழ மக்களைப் பொறுத்தவரை பொருட்படுத்தும் அளவிற்குத் தேவையற்றதொன்று. ஆனால் அவரின் அனுபவம் வரலாறு தனியாக அவருக்கானதொரு படிப்பினை அல்ல. நாடு என்றரீதியில் படுகொலைகளிலும், இன அழிப்பிலும் ஈடுபடும் அனைத்து இராணுவ அதிகாரிகளுக்கும் படிப்பினையாகும். ஏனெனில் சிங்கள ஆட்சியாளர்கள் நாட்டிற்கோ அன்றி பௌத்த பேரினவாதத்திற்கோ விசுவாசமாக இருப்பவர்களை மட்டும் விரும்புவதில்லை. தமக்கு அடிமைச்சேவகம் செய்யத் தயாராக உள்ளோர்களையே விரும்புகின்றனர். சிங்கள நாட்டிற்காகவும், பேரினவாதத்திற்காகவும் சேவை செய்பவர்கள் கறிவேப்பிலை போன்றவர்கள். காரியம் முடிந்ததும் தூக்கி வீசப்பட்டு விடுவார்கள். இதனை இன்று ஆட்சியாளரின் போருக்கான அழைப்பிற்குச் செவிசாய்க்க விரும்பும் சிங்கள இளைஞர்கள் புரிந்து கொள்ளுதல் நல்லது. ■



41-kalaththil 2001.jpg

# தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை

## தமிழ் மக்களின் விடுதலைக்கெதிரான நடவடிக்கை

### கொழும்புப் பத்திரிகைகளின் குற்றச்சாட்டு

ஞாயிறு தினக்குரல்
An Independent Weekly Voice In Tamil
04.05.2001

### தடைகளின் பின்னே உள்ள கரம் தமிழர்களுக்குத் தெரிந்துவிட்டது

விடுதலைப் புலிகளை பிரிட்டனில் தடைசெய்யப்பட வேண்டும் என்பதில் இந்தியா வெகு அக்கறையுடன் செயற்பட்டு வந்ததாகச் செய்திகள் தெரிவித்துள்ளன. இச்செய்திகளை முற்றுமுழுதாக உறுதிப்படுத்தும் வகையில் வெள்ளியன்று பத்திரிகையாளர் மாநாட்டில் கதிர்காமர் தெரிவித்த தகவல்கள் அமைந்திருந்தன. "நாம் கேட்காமலே இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந் சிங் புலிகளைத் தடை செய்யுமாறு பிரிட்டனைக் கேட்டிருந்தார். இவ்விவகாரம் தொடர்பாக நான் தொடர்பு கொண்டபோது தாம் இது குறித்து பிரிட்டனுடன் கதைத்துள்ளதாகக் குறிப்பிட்டார்"

இலங்கை இனநெருக்கடி விவகாரத்தில் இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடு எத்தகையது என்பது குறித்து திட்டவட்டமாகத் தீர்மானிக்க முடியாத நிலை எவருக்குமே இருக்குமேயானால் அந்த நிலைக்கு முடிவு வந்துவிட்டதென்றே கூறவேண்டும். இந்தியா தொடர்பாக தமிழர்களின் மனஉணர்வு எத்தகையதாக இருக்கின்றது என்ற கேள்விகளுக்குத் தெளிவான பதில் கிடைத்துவிட்டது. ■

### அரசியல் முதுகு சொறிவாகப் போயுள்ள...

-மாதொருபாகன்-

பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற முத்திரையோடு ஒரு பேரினவாத ஜனநாயக ஆட்சிதான் நடந்தேறுகின்றது. ஏழு வருடகாலமாக தேசிய சமாதானத்தைத் தேடிக் கொண்டிருக்கும் அரசியல், இப்பொழுது பயங்கரவாதத்தின் உச்சாணிக்கொம்பில் ஏறி கொப்புக்குக் கொப்புப் பாய்கிறது. பிரித்தானியா மூலமும் விடுதலைப் புலிகளைத் தடை செய்து பட்டியலிட்டுவிட்டது. இனிமேல் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் பயங்கரவாதத்திற்கு எதிராக அணிதிரள வேண்டும் என்று எமது வெளிவிவகார அமைச்சர் கர்ச்சித்துள்ளார். இது உள்வீட்டு பிச்சைக்காரத்தனத்தை மறந்த டாம்பீகமாகிவிட்டது.

### பிரிட்டிஸாரின் தடை பேரினவாத சக்திகளுக்குப் போட்ட தீனி

-அநாமிகன்-

பிரிட்டிஸ் தடை தென்பகுதி பேரினவாத சக்திகளுக்குப் போட்ட தீனியாகவே தமிழர் வட்டாரங்கள் கருதுகின்றனர். விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை வேண்டாம். யுத்தத்தைத் தொடர்க எனத் தென்னிலங்கையில் ஆர்ப்பாட்டங்கள், இயக்கங்கள் நடத்தும் பேரினவாத சக்திகளை ஒடுக்குவதற்கு அரசானது என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது. அரச பயங்கரவாதம்தான் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு வழிவகுத்தது என்பது தெரிந்ததே. இந்நிலையில், விடுதலைப் புலிகள் மீதான தடை, பௌத்த இனவாதத்திற்கும், பாசிசத்திற்கும் கிடைத்த வெற்றி என்ற விடுதலைப் புலிகளின் ஆலோசகரின் கூற்றினை சர்வதேச சமூகம் புறக்கணிக்க முடியாது. ■

### இந்தியாவிற்கும் இந்த அறிவிப்பு மெத்த மகிழ்ச்சி

-விதுரன்-

பிரிட்டனின் இந்த அறிவிப்பானது இலங்கை அரசிற்குப் பெரும் உற்சாகத்தை அளித்துள்ளது. அத்துடன் தடை செய்யும் விவகாரத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பிரிட்டனுக்குப் பெரும் நெருக்கடிகளைக் கொடுத்து வந்த இந்தியாவிற்கு இந்த அறிவிப்பானது பெரும் மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளித்துள்ளதுடன், தனது இராஜதந்திர அணுகுமுறைக்கும் வெற்றிகிட்டியுள்ளதாக இந்தியா கருதுகின்றது.

நோர்வே முன்வைத்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் சர்வதேசக் கண்காணிப்புக் குழுவும் இடம்பெறுகின்றது. இந்தக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகள் என அரசும் புலிகளும் சிபார்சு செய்யும் 9நாடுகள் அங்கம் வகிக்கும். இதற்கமைய புலிகள் சிபார்சு செய்த நாடுகளில் இலங்கைக்கு இராஜுவரீதியாக உதவி செய்யும் நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் இக்குழுவில் அங்கம் வகிப்பதை விரும்பவில்லை. இதேநேரத்தில் இந்தியா தனது கட்டுப்பாட்டுப் பிராந்தியத்தில் இலங்கை இனப்பிரச்சினையைச் சாட்டாக வைத்துக் கொண்டு மற்றும் பிரிட்டனும் வருவதை விரும்பவில்லை. ■

### சிங்களத்தின் பக்கம் சாய்ந்துவிட்ட பிரித்தானியா

-அஜாதசத்ரு-

பிரிட்டனில் தடை செய்யப்பட வேண்டிய பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப் புலிகளையும் இணைத்ததன் மூலம் அது இலங்கைத் தமிழர்களுக்கான உரிமைப்போராட்டத்தில் நடுநிலையான போக்கொன்றிற்கான பாதையிலிருந்து நழுவி சிங்களப் பௌத்த பேரினவாத சக்திகளைத் திருப்திப்படுத்த முனைந்துள்ளமையையே வெளிக்காட்டி நிற்கின்றது.

பிரிட்டனின் இன்றைய இந்த நிலைப்பாடானது கடந்த இரு தசாப்த காலத்திற்கும் மேலாக இலங்கையில் தொடரும் போரை முடிவிற்குக் கொண்டு வந்து தீர்வொன்றைக் காணும் நோர்வேயின் முயற்சிகளுக்கு பெரும் பாதிப்பொன்றையும் ஏற்படுத்தப் போவதில்லை. எனினும் இலங்கைத் தமிழர் தொடர்பில் ஒரு கசப்பான நிலைப்பாட்டிற்கே வழிவகுக்கக்கூடும். ■

வார இதழ் ஆதவன்
ATHAVAN
4.05.2001

### தமிழர் உறவில் நிகழ்ந்த ஒரு துக்கநாள்............

-விக்ரர் ஐவன்-

இன்றையநாள் ஒரு சோகநாள் ஆங்கிலேயர்- தமிழர் உறவில் நிகழ்ந்த ஒரு துக்கநாள் என திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் குறிப்பிட்ட கருத்து மிகவும் ஆழமான ஒன்றாகும். அதன் உள்ளார்ந்த உண்மையை எதிர்கால நிகழ்வுகளிலேயே அறிய வரலாம். பிரிட்டனில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் உலாவுவதில்லை. இந்தத் தடை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எவ்விதத்திலும் தடையாக இருக்கப்போவதில்லை. இது இலங்கை எடுத்த முடிவல்ல. பிரிட்டிஸ் அரசாங்கம் எடுத்த முடிவாகும். ஆனால் சிறிலங்கா அரசாங்கத்திடம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புக் குறித்து ஆவல் இருக்கின்றதா என்பதே எம்முன் எழுந்துள்ள கேள்வியாகும். சமாதானத்திற்கான நாட்டமோ அதற்குரிய வேலைத்திட்டமோ அரசாங்கத்திடம் இல்லை. ■

### பிரித்தானிய அடக்குமுறையின் உண்மைத் தோற்றம்

-கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின -

விடுதலைப் புலிகள் மீதான தடை பிரித்தானிய அடக்குமுறையின் உண்மைத் தோற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது. தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளை மேற்குலகு ஒருபோதும் ஆதரிக்கமாட்டாது. பிரித்தானியாவின் தடையானது இதனை நிரூபித்துள்ளது. ■

### தடைகள் கொண்ட இலட்சியத்தை மழுங்கடிக்காது

-ஆசிரியர் கருத்து -

பிரிட்டிஸ் அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்துள்ளது தமிழ் மக்களின் எண்ணங்களுக்கு மாறாகவும், தமிழ்க் கட்சிகளின் வேண்டுகோள்களையும் நட்டிக்கழித்து பிரிட்டிஸ் அரசாங்கம் இம்முடிவை எடுத்துள்ளது. சரித்திரம் மாறும், திரும்பி வரும். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேசியத் தடைகளால் மழுங்கடிக்க முடியாது. ■

வாரவெளியீடு வீரகேசரி
THE VIRAKESARI ILLUSTRATED WEEKLY
04.05.2001

### சமாதானம் மலரும் என்றிருந்த வேளையில் பிரித்தானிய அரசு தடைப்பட்டியலை வெளியிட்டுள்ளது.

-ஜீ.நடேசன்-

எந்தவொரு தீவிரவாத அமைப்பும் மக்களின் ஆதரவைப் பெறாது நீடித்து நிலைக்க முடியாது. அந்த வகையில் பிரித்தானியர் விட்ட, வரலாறு மறக்க முடியாத தவறு காரணமாக ஒடுக்கப்பட்ட இலங்கைத் தமிழ் தேசிய இனத்தினது விடுதலைப் போராட்டம் சாத்வீகவழியில் தொடங்கி பின்னர் ஆயுதப் போராட்டமாகத் தீவிரம் பெற்றது. மக்கள் ஆதரவு இல்லாவிடில் கடந்த 24 வருடங்களாக விடுதலைப் புலிகளால் செயற்பட முடியாதென்பதை, பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனப்படுத்திய பிரித்தானியா கருத்தில் கொள்ளவில்லை. ■

### பொருளாதார நலன்களுக்காக புலிகளுக்குத் தடை

-சத்திரியன்-

புலிகளைத் தடைசெய்ய வேண்டும் எனக்கோரும் அறிக்கைகளை சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளும் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் பிரித்தானிய அரசிற்கு விடுத்திருந்தன. இதனைவிட இந்திய அரசாங்கமும் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்ற வகையிலான இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டிருந்தது. பிராந்திய வல்லரசான இந்தியாவினதும், இலங்கையரசினதும் [illegible] இராஜதந்திர நகர்வுகளுடன் முட்டி மோதிக்கொள்ளும் வகையில் புலிகளும் தமது இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். [illegible] விடுதலைப் புலிகளின் நகர்வுகள் இலங்கையரசின் இராஜீய நடவடிக்கைகளைத் தோற்கடித்துவிடக்கூடிய நிலையும் இருந்தது. இறுதிக்கட்டத்தில் புலிகள் மீதான தடையை அமுல்செய்வதற்கு ஆதாரமாக இந்தியாவின் [illegible] இராஜதந்திரமும் பயன்படுத்தப்பட்டது. இதற்குப் பிரதிபலனாக பிரித்தானிய நிறுவனங்களுக்கு வர்த்தகப் பொருளாதார நலன்களை விட்டுக்கொடுக்கவும் இந்திய அரசு முன்வந்ததாகவும், இது தொடர்பாக சந்திரிகா அம்மையார் அதிக பேச்சுக்களில் இந்திய விஜயத்தின்போது ஈடுபட்டதாகவும் தெரியவருகின்றது. ■

### பிரித்தானியா எம்மை மேலும் ஏமாற்றியுள்ளது

கலாநிதி நடராஜகுமாரன் [illegible]



பிரித்தானியா புலிகளைத் தடைசெய்வது ஓரளவு பின்னடைவைக் கொடுத்தாலும் நோர்வேயின் சமாதான முயற்சியை இது பாதிக்காது. 1929ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழுவினரால் சேர் பொன். இராமநாதன் ஏமாற்றப்பட்டதுபோல, 1947ஆம் ஆண்டு சோல்பெரி ஆணைக்குழுவினாலும் தமிழ் இனத்திற்கு சமஉரிமை கேட்ட ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஏமாற்றப்பட்டார். இதுபோன்ற ஏமாற்றத்தை பிரித்தானியா மூலம் நாங்கள் மீண்டும் அடைந்திருக்கின்றோம். ■

# உயர்ந்துசெல்லும் விலைவாசியை போராட்டங்கள் கட்டுப்படுத்துமா?

சிறீலங்கா இன்று முகம்கொடுக்கும் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க பொதுமக்கள் மீது அதிக சுமையைச் சுமத்துவதென பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தீர்மானித்துவிட்டதன் அறிகுறியாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள்கூட அதிகரிக்கும்போக்கு அண்மைக்காலமாகக் காணப்படுகின்றது.

சிறீலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக 2ஆவது தடவையாக சந்திரிகா அம்மையார் பதவி ஏற்று ஒருவருடம் கடந்துவிட்ட நிலையிலும், அண்மையில் தேர்தல்கள் எதனையும் கண்டிப்பாக சந்தித்தேயாக வேண்டிய நிலை இல்லாத வேளையிலும் இந்த விலை உயர்வுகள் ஏற்பட்டிருக்கின்றன.

எவ்வளவுதான் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுகின்றபோதிலும், தேர்தல் நெருங்கும் சமயங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பை சிறீலங்கா அரசாங்கங்கள் மேற்கொள்வதில்லை. ஆனால், அண்மைக்காலத்தில் தேர்தல்கள் இல்லாததும் இவ்வாறானதொரு அதிகரிப்பை மேற்கொள்ள சாதகமான நிலையை சந்திரிகா அரசுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது.

அதேவேளை, இந்த விலைவாசி அதிகரிப்புகளுக்கு எதிராக அரசியல் கட்சிகளின் போராட்டங்கள் நடந்துகொண்டு இருக்கின்றன.

கடந்தமாதம் 8ஆம் திகதி கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் விலைவாசி உயர்வைக் கண்டித்து ஜே.வி.பி. ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தியது. இதனை பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம், தடியடிப்பிரயோகம் நடத்தி முறியடித்தனர். இப்பொழுது விலைவாசியைக் குறைக்கவேண்டும், அல்லது சம்பளத்தை அதிகரிக்கவேண்டும் எனக்கோரி 10 இலட்சம் கையொப்பங்களைக் கொண்ட மகஜரொன்றை ஜே.வி.பி. சிறீலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்த மகஜருக்கு 'தலை வணங்கி' அரசாங்கம் விலைவாசியைக் குறைக்காவிடின் தொழிற்சங்கப் போராட்டத்தை நடத்தப்போவதாக ஜே.வி.பி. அறிவித்திருக்கின்றது. இந்தப் போராட்டம் வெற்றிகரமாக நடத்தப்படின் அரசாங்கம் அதனை



விலை உயர்வைக் கண்டித்து போராட்டம் நடத்தும் ஜே.வி.பி யினர்.

எவ்வாறு கையாளும்? அவசரகாலச் சட்டத்தின் கீழ் அதனை இரும்புக்கரம் கொண்டு நசுக்கவும் அது தயாராகவே இருக்கின்றது என்பதை பலமுறை அது நிரூபித்திருக்கின்றது.

அதேவேளை, இந்த விலைவாசி ஏற்றத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி கடந்த மாதம் நான்காம் திகதி முதல் கண்டியிலிருந்து கொழும்பு வரையான பாதயாத்திரையில் ஈடுபட்டுவந்தது. இந்தப் பாதயாத்திரைக்கு தமது ஆதரவாளர்கள் இடையூறு விளைவிக்கக்கூடாது என்றும் அதற்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருந்தார்.

ஆனால், பாதயாத்திரையில் தொடர்புபட்டிருந்தோர் அதன் இரண்டாவது நாளே தாக்கப்பட்டார்கள்.

இதேவேளை, பாதயாத்திரை 'இடையூறின்றி' நடந்ததாகக் கூறும் அரசாங்கப் பிரச்சார ஊடகங்கள் அவ்வாறு இடையூறின்றி நடப்பதற்கு புலிகளுக்கும் ஐ.தே. கட்சிக்கும் இடையிலான தொடர்புதான் காரணம் என்ற பிரச்சாரத்திலும் இறங்கியிருந்தன. அத்துடன், சந்திரிகா அம்மையாரை தனிப்பட்ட முறையில் இழிவுபடுத்தும் வகையிலான நடவடிக்கைகள் இந்தப் பாதயாத்திரையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பிரச்சாரம் செய்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் ஐ.தே.கட்சி நடத்தும் இவ்வகை ஆர்ப்பாட்டங்களை அரசாங்கம் பொருட்படுத்தியுள்ளதா? என்ற கேள்வியும் எழவே செய்கின்றது.

இவை ஒருபுறமிருக்க இந்தப் பாதயாத்திரைகள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள் சிங்கள மக்கள் மத்தியில் எந்த வகையில் தாக்கத்தை ஏற்படுத்தி அரசாங்கத்திற்கெதிராக எழுச்சி கொள்ள வைக்கப் போகின்றன? விலைவாசி உயர்வு இன்று ஏழைமக்கள் முதல் அனைவரிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது வெளிப்படையானதே.

ஆனால், இந்த விலைவாசி உயர்வுக்கு எதிராகப் போராட்டம் நடத்துபவர்களின் உள்நோக்கம், இந்த விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராடி அதிலிருந்து மக்களுக்கு விமோசனம் பெற்றுத் தருவதுதானா? எதிர்வரும் ஏப்ரல் புதுவருடத்திற்குமுன் சந்திரிகாவின் ஆட்சியை அகற்றுவதுதான் ஐ.தே.க. வின் குறிக்கோள் என்பது ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அவ்வாறு போராட்டத்தின் மூலம் இந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டு, புதிய ஆட்சி ஏற்படுமாயினும் இவர்களால் இந்த விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த முடியுமா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் சிங்கள மக்களுக்கு விடை தெரிந்தே உள்ளது.

இன்று சிறீலங்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முக்கியமான காரணம், தொடரும் யுத்தமே என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இதனையே காரணமாகக் கூறுகின்றார். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அவர்கள் கடைப்பிடிக்கும் வழி, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஒருபோதும் உதவப்போவதில்லை என்பதும் அவருக்கு நன்கு தெரியும். ஆனால், மீள



பாதயாத்திரையில் ஈடுபட்ட ஐ.தே.கவினர்

முடியாத சுழலுக்குள் சிக்கிவிட்டது போன்று ஆழ இறங்கிவிட்ட யுத்தத்தைக் கைவிட முடியாத நிலையில் இருக்கின்றார் என்பதே உண்மையாகும்.

அதாவது, யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட முடியும் என்ற பெரு நம்பிக்கையில் அனைத்து வளங்களையும் யுத்தத்துக்கே திருப்பிவிட்ட அவரது அரசாங்கம், இப்போது யுத்தத்தில் வெற்றிகிட்டாது என உணர்ந்தாலும்கூட அதிலிருந்து மீளமுடியாத நிலையில் இருக்கின்றது. அபிவிருத்தி நடவடிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு, அனைத்தும் பாழ்பட்ட நிலையில் யுத்தத்தைக் கைவிட்டாலும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளமுடியாத நிலைக்கு சிறீலங்காவின் பொருளாதாரம் சென்றுள்ளது. எனவே சூதாடிபோல மீண்டும் மீண்டும் யுத்தத்திலேயே பணத்தை விடும் நிலைக்கு சந்திரிகா அரசாங்கம் வந்துள்ளது.

ஆனால், சந்திரிகா அரசாங்கத்துக்கெதிராக குரல் கொடுப்பவர்கள் யுத்தத்தில் வெற்றிபெற முடியுமென்ற நம்பிக்கையைக் கொண்டவர்களாகவும் இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்கும் விலைவாசி உயர்வுக்கும் யுத்தம் முக்கிய காரணமல்ல. சந்திரிகா குமாரதுங்கவின் நிர்வாகத் திறமையின்மையே காரணம் எனவும் வாதிடுபவர்களாக உள்ளனர்.

யுத்தத்திற்கு என ஒதுக்கப்படும் பெருமளவு நிதி சீருடை தரித்தவர்களினதும், அரசியல்வாதிகளினதும் பைகளுக்குள் செல்வதே யுத்தத்தில் வெற்றி பெற முடியாமைக்கும், பொருளாதார நெருக்கடிகளுக்கும் காரணம் என்பது இவர்களது வாதமாக இருக்கின்றது. மேலும் சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் மேற்கொள்ளப்படும் வீண் விரயங்களும் பொருளாதார நெருக்கடிகளுக்குக் காரணம் எனத் தெரிவிக்கின்றனர். உதாரணமாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் இழுத்துவைத்திருக்கும் நோக்கத்துடன் சந்திரிகா அம்மையார் அமைத்துள்ள மிகப் பெரிய மந்திரி சபையை இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவர்கள் கூறும் மேற்படி காரணங்களில் உண்மை இருந்தாலும்கூட இவ்வளவு விரயங்களும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்திலும் காணப்பட்டவையே. இக் காரணங்களுக்காகவே மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை 17 ஆண்டுகால ஆட்சியின் பின் தூக்கி எறிந்தனர்.

இந் நிலையில் ஐக்கிய தேசிய கட்சியினர் நடத்தும் இத்தகைய பாதயாத்திரைகள் மக்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்துமா? அல்லது யுத்தத்தை வலியுறுத்தும் ஜே.வி.பி யின் போராட்டங்கள் சிங்கள மக்களுக்குப் பயன்தருமா?

ஜனநாயகம் என்ற பெயரில் ஜே.வி.பி.யும் ஐ.தே.கட்சியும் நடத்தும் போராட்டங்கள் ஒரு கட்டத்திற்குமேல் அரசாங்கத்தால் அனுமதிக்கப்படமாட்டாது. தற்போதைய அரசியலமைப்பின் அடிப்படையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி கொண்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி சந்திரிகா அம்மையாரின் ஆட்சி இத்தகைய போராட்டங்களை ஒடுக்கவே செய்யும். இவ்வாறான நிலையில் பாராளுமன்றத்தில் மிகக் குறைந்த பெரும்பான்மையுடன் இருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு நெருக்

**வேலவன்**

கடி கொடுக்கும் நிலையில் ஐக்கிய தேசியக்கட்சியும் ஜே.வி.பி.யும் உள்ளன. ஆனால், இவ்விரு கட்சிகளுக்கும் இடையேயுள்ள ஆழமான முரண்பாடு சந்திரிகா அம்மையாரின் ஆட்சியைத் தூக்கி எறிவதற்குத் தடையாகவே இருக்கும்.

எவ்வாறாயினும், இந்த மாற்றங்கள் நிகழ்ந்தாலும்கூட, அது சிங்கள மக்களுக்குப் பயன் தருவதாக இராது.

சிங்கள அதிகாரவர்க்கம் நடத்தும் இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, சிங்கள மக்களுக்கும் எதிரானதே என்பதை சிங்கள மக்கள் புரிந்துகொண்டு விழிப்புணர்வு பெறும் பொழுது மட்டுமே நிரந்தரமான சுபீட்ச நிலையை சிங்கள மக்கள் அடையமுடியும். ■

# விடுதலையின் விளிம்பில் தமிழீழப் பெண்சமூகம்



சிறீலங்கா இனவாத அரசின் நிறுவனமயப்படுத்தப்பட்டு திட்டமிடப்பட்ட இராணுவச்செயற்பாடுகளும் அதனால் உண்டாகும் அழிவுகளும் இழப்புக்களும் ஒரு பக்கம். மேலும் மேலும் இறுக்கமாக்கப்படுகின்ற பல்வேறு தடைகளால் தொடரும் மரணங்களும் துயரங்களும் மறுபக்கம். இத்தனைக்குள்ளும் துவண்டுவிடாமல் நிமிர்ந்து நிற்கின்றது தமிழீழ சமூகம். பதினாறாயிரத்திற்கு மேற்பட்ட ஆண் பெண் மாவீரர்களின் வீரத்தாலும் ஈகத்தாலும் உருவாகிக் கொண்டிருக்கின்றது தமிழீழத் தாயகம். தமிழீழ தேசத்தின் விடுதலை வென்றெடுக்கப்படுகின்ற நாளில் பெண்களுக்கு விடுதலை கிடைக்கும் என்ற நினைவுடன்தான் அவர்கள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்கள். விடுதலையை எவரும் எமக்குத் தரப்போவதில்லை, நாம்தான் போராடிப் பெற்றுக்கொள்ள வேண்டும். எம் தலைவிதி இதுவென தமிழீழ பெண்சமூகம் உள்ளமும் உடலும் சோர்வதை விடுத்து, விதியை மாற்றுவோம் என்ற தீர்மானத்துடன் எழுச்சி கொண்டு நிமிர்ந்து நிற்கின்றது.

கால்நூற்றாண்டுகால ஆயுதப் போராட்ட காலத்தில் பெண்களின் நேரடிப் பங்களிப்பு என்பது கடந்த 15 ஆண்டுகாலமாகத் தொடர்கின்றது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்களது நேரடிப்பங்கை- களமுனைகளில் அவர்களது மறத்தை, போர்த்திறனை வியந்து பாராட்டாதவர்கள் இல்லை. அந்தளவிற்கு போராட்டத்தில் தமிழீழப் பெண்களின் பங்கும் பணியும் மிகமுக்கியம் பெறுகின்றது.

1948இல் பிரித்தானியர் இலங்கைத்தீவின் இறைமையை சிங்களதேசத்தின் கையில் கொடுத்துவிட்டுச் சென்றனர். அன்றிலிருந்து சிங்களதேசம் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளத் தொடங்கியது. சிறீலங்கா அரசின் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறைகளிற்கு எதிராக தமிழீழ மக்கள் அகிம்சை வழியில் அறப்போராட்டங்களை மேற்கொண்டனர். 50களிலும் 60களிலும் தமிழ் மக்கள் திரண்டு நடத்திய போராட்டத்தில் கணிசமான அளவு தமிழீழப் பெண்கள் கலந்து கொண்டனர். 1961 பெப்ரவரியில் ஆரம்பமாகி தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் நடைபெற்ற சட்டமறுப்புப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழீழப் பெண்கள் கலந்து கொண்டனர். இவ்அறவழிப் போராட்டங்கள் அரச இராணுவ இயந்திரத்தால் கொடூரமான முறையில் ஒடுக்கப்பட்டன.

இளைய தமிழச் சமூகத்திற்கு உயர், கல்வியும், வேலைவாய்ப்பும் மறுக்கப்பட்டது. அரச ஆதரவோடு தமிழர் தேசமெங்கும் சிங்களக் குடியேற்றங்கள் பெருமெடுப்பில் முன்னெடுக்கப்பட்டன. பல்வேறு பரிமாணங்களில் தமிழர்கள்மீது அரசபயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டதோடு, திட்டமிட்ட தமிழர்கள் மீதான படுகொலைகளும் சிங்களக்காடையர்களால் அரங்கேற்றப்பட்டன. பொறுத்தது போதுமெனத் தமிழர்கள் பொங்கியெழுந்தனர். 1972இல் தமிழீழத் தேசியத் தலைவரவர்களின் தலைமையில் தமிழீழ மக்களின் ஆயுதப் போராட்டம் உருவெடுத்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆரம்பத்தின்போதே பெண்களை இணைப்பது குறித்துச் சிந்தித்தபோதிலும் சில தயார்ப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. தளைகளால் கட்டப்பட்டிருந்த தமிழ்ச் சமுதாயத்திலிருந்து ஆயுதப் போராட்டத்திற்குப் பெண்களைத் தயார்ப்படுத்த வேண்டியிருந்தமையால், ஆயுதப்போராட்டம் ஆரம்பமான முதல் தசாப்த காலத்தில் பெண்களின் களமுனைப் பங்களிப்பு என்பது பெறப்படவில்லை. போராட்டத்தி[illegible] களிலும், பிரச்சார வேலைகளிலும் பெருமளவிலான தமிழீழப் பெண்கள் உள்வாங்கப்பட்டனர். 1984இல் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் அவர்களின் வழிநடத்தலில் உருவான சுதந்திரப்பறவைகள் அமைப்பில் தமிழீழப் பெண்களில் பலர் இணைந்து பணியாற்றினர். பிரச்சாரவேலைகளிலும், மருத்துவப்பணிகளிலும் சுதந்திரப்பறவைகள் ஈடுபட்டனர்.

தமிழீழ விடுதலை வரலாற்றில் பெண்களுக்கான முதலாவது பயிற்சி முகாம் 18-08-1985 அன்று உருவாக்கப்பட்டது. ஆனையை அடக்கிய அரியாத்தையினதும், ஒல்லாந்தருக்கு திறைகொடுக்க மறுத்த வெலுநாச்சியாரதும் பரம்பரையில் வந்தவர்கள் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்ப்பதற்குக் கருவிகளை ஏந்தத் தொடங்கினர். கடுமையான பயிற்சிகளை மனத்திண்மையோடும் கொண்ட இலட்சியத்தில் குன்றிடாமல் செய்து முடித்தனர்.

1986ஆம் ஆண்டு பெண்கள் அணி மன்னார்ப்பரப்பில் கால் பதித்தது. மன்னார் மாவட்டத் தளபதியும் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினருமான லெப்.கேணல் விக்ரரின் ஆளுமையின் கீழ் பெண் போராளிகள் களமுனைக்கு அனுப்பப்பட்டனர். 12.10.1986 அன்று அடம்பன் கிராமம் ஈழ விடுதலை வரலாற்றில் தனது பெயரையும் பதித்துக் கொண்டது. தள்ளாடி முகாமிலிருந்து முன்னேறிய இராணுவத்தை அடம்பனில் வைத்து எதிர்கொண்டனர் விக்ரரின் தலைமையிலான ஆண் போராளிகளும் பெண் போராளிகளும். பல தசாப்த காலமாக மனக்குமுறலோடு காத்திருந்த தமிழீழப் பெண்ணினம் முதன்முதலாக சிங்களப் பேரினவாதத்தை அடம்பனில் வைத்துப் புறங்கண்டது. உயிருடன் இரண்டு சிப்பாய்கள் பிடிபட்டனர். 14உடலங்களும் கைப்பற்றப்பட்டன. இவ்வழிமறிப்புச் சமரில் பெண் போராளிகளை [illegible] விக்ரர் வீரச்சாவடைந்தார்.

தொடர்ந்தன பெண்போராளிகளின் தாக்குதல்கள், மன்னாரில் ஆரம்பித்த அவர்களின் தேசமீட்புப் பணி தமிழீழம் எங்கும் பரவியது. தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், தங்களைத் தாமே பெண் போராளிகள் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என விரும்பினார். பெண்களுக்கான இரண்டாவது பயிற்சி முகாம் யாழ் குடாநாட்டில் 01.07.1987இல் தோற்றம் கண்டது. இம்முகாமின் பயிற்சி ஆசிரியர்களாகவும், நிர்வாகிகளாகவும் முதலாவது பயிற்சி முகாமில் பயிற்றப்பட்ட பெண் போராளிகள் கடமையாற்றினர்.

இந்திய இராணுவப் போர் ஆரம்பித்த வேளையில் யாழ் குடாநாட்டின் பல இடங்களிலும் பெண்புலிகள் தீரத்துடன் போர்புரிந்தனர். 10-10-1987அன்று ஆரம்பமான இந்திய இராணுவத்துடனான போரில் 2ஆம் லெப்.மாலதி முதற் பெண் மாவீரராக வீரச்சாவடைந்தாள். மணலாற்றில் தலைவரின் கண்காணிப்பில் விடுதலைப் புலிகளின் மகளிர் அணி புதிய வீச்சோடு வளர்ந்தது. 13.08.1990இல் தென்தமிழீழத்திலும் பெண்களுக்கான முதலாவது பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்திய இராணுவ வெளியேற்றத்தின் பின்னர், இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானது. பெண் போராளிகள் புதிய பரிமாணத்தினை அடைந்தனர். பெண்கள் கடலுக்குப் போகக்கூடாது என்ற சமூகத்திலிருந்து பெண்களும் கடலில் எதிரியை விரட்டலாம் என்று செய்து காட்டினார் தலைவர். கப்டன் அங்கயற்கண்ணி காங்கேசன்துறையில் வெடித்து முதற் பெண் கடற்கரும்புலியாக சாதனை படைத்தாள்.

உலக கடற்படை வரலாற்றில், கடற்புலிகளின் சிறப்புக் கட்டளைத் தளபதியாக இருந்த பெண்ணொருத்தி யுத்தக்

# அளவிற்கு மீறிய சுதந்திரம்!

சிறீலங்கா இன்று எதிர் நோக்கும் நெருக்கடிக்கு யுத்தமே காரணம் என்பது பொதுவான அபிப்பிராயம். இது எவராலும் நிராகரிக்கத்தக்கதும் அல்ல. ஆனால், பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க இதனை ஏற்றுக்கொள்வாரா என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், சிறீலங்கா இன்று எதிர்நோக்கியுள்ள நெருக்கடிக்குப் புதிய காரணிகளைப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க வெளியிட்டுள்ளார்.

இதில், 'நாட்டில் இன்று தோன்றியுள்ள பாரிய நெருக்கடி நிலைக்கு மக்கள் அனுபவிக்கும் அளவிற்கு அதிகமான சுதந்திரமே காரணமாகும். முன்னேற்றம் அடைந்த எந்த நாட்டிலும் இதுபோன்ற சுதந்திரம் கிடையாது' என்பது முக்கியமானதொரு காரணியாக அவரால் கூறப்பட்டுள்ளது.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இலங்கையிலுள்ள சிறுபான்மை இனத்தவர் குறித்து இவ்வாறு தெரிவித்திருப்பின் இது ஆச்சரியப்படத்தக்கதொன்றல்ல, ஏனெனில், சிறுபான்மையினரின் உரிமைகள் விடயத்தில் அவர்களுக்குப் போதுமானதும், அதற்கும் மேலானதையும் வழங்கிவிட்டோம் என்பது அவரின் பொதுவான நிலைப்பாடு.

ஆனால், பிரதமரின் பேச்சானது பொதுப்படையானதாக இலங்கையிலுள்ள அனைவருக்குமானது போன்றும் உள்ளது. இந்நிலையில் சந்திரிகா குமாரதுங்க அரசு மக்களுக்கு வழங்கிய 'அதிகப்படியான சுதந்திரம்' என்ன என்பது குறித்த கேள்வி தவிர்க்கமுடியாது எழுகின்றது.

சந்திரிகாவின் பதவிக்காலம் சிறீலங்காவைப் பொறுத்து பல்வேறு 'சிறப்புக்களைக்' கொண்டதாகும். குறிப்பாக இலங்கையின் அரசியல் வரலாற்றில் நீண்ட காலம் அவசரகாலச் சட்டத்திற்குள் ஆட்சி செய்தவராக இவரே உள்ளார். இதனால், மக்களுக்கு அதிகரித்த சுதந்திரம் எவ்வாறு வழங்கப்பட்டது? எவ்வாறு மக்கள் அனுபவித்தார்கள் என்பது குறித்து குழப்பங்கள் எழுகின்றது.

ஏனெனில், அவசரகாலச் சட்டவிதிகள் நாட்டில் அமுல்செய்யப்படும் வேளைகளில் மனிதனின் அடிப்படை உரிமைகளில் இருந்து ஜனநாயக உரிமைகள் வரை பறிக்கப்படுகின்றன. அவசரகாலச் சட்டவிதிகள் ஆயுதப்படையினருக்கு வழங்கிய அதிகாரங்கள் மக்களின் சிவில் உரிமைகளையே இல்லாது ஒழித்துவிடுகின்றது.

இதேசமயம், அவசரகாலச் சட்டத்தை ஆட்சியாளர் பத்திரிகைத் தணிக்கை போன்றவற்றிற்குப் பயன்படுத்தியதன் காரணமாக ஜனநாயக உரிமைகளில் முக்கியமானதொன்றாகக் கருதப்படும் கருத்துச் சுதந்திரமே பறிக்கப்பட்டது போன்றதொரு நிலையும் உருவாக்கப்பட்டது.

இதையும் மீறி ஊடகவியலாளர்கள் செயற்பட முற்பட்டபோது கொலைப் பயமுறுத்தல்கள் ஒருபுறமும், பழிவாங்கும் வகையிலான சட்டநடவடிக்கைகள் என மறுபுறமுமாக ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் வகையில் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் இருந்தன.

இவற்றுக்கும் மேலாக சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் நடத்திய தேர்தல்கள் ஜனநாயகம் என்பதையே கேலிசெய்வது போன்றிருந்தது. ஏனெனில், தேர்தலின்போது ஆட்சியாளர் நடத்திய வன்முறை மற்றும் மோசடிகள் மக்களின் வாக்குரிமையை அர்த்தமற்றதொன்றாக்கியது. அதாவது, ஜனநாயக நாட்டில் மக்களின் அடிப்படை உரிமையான வாக்குரிமையை அவர்களிடம் இருந்து பறித்தெடுத்தது. இதன் காரணமாகவே சிறீலங்காவில் ஜனநாயகம் என்பது கேள்விக்குரியதாகியது.

இந்த நிலையில் மக்கள் எவ்வகையான அதிகரித்த சுதந்திரத்தை அதுவும் உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவில் சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர் என்பது பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிற்கே வெளிச்சமானது. ஆனால், பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இவ்வாறு கூறமாட்டார் என்று மாத்திரம் நிராகரித்துவிட முடியாது.

ஏனெனில், அவர் பௌத்தக் கோட்பாடுகளில் இருந்தும், பண்புகளிலும் இருந்து விலகிச் சென்றுள்ளதினால் மக்கள் கீழ்த்தரமான சமூக அமைப்பில் வாழவேண்டி வந்துள்ளது எனக் கூறிக்கொண்டே, யுத்தத்தை நடாத்துவதில் தீவிர அக்கறை காட்டும் ஒரு பௌத்தர். அதாவது, கொல்லாமையைப் போதிக்கும் பௌத்தத்தின் பெயரில் நாட்டையே கொலைக்களமாக்கத் துடிக்கும் ஒரு யுத்த வெறியர். இவ்வாறான ஒருவர் சுதந்திரத்திற்கும் புதிய விளக்கங்களையும், வரையறைகளையும் கொடுப்பது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல. ■

கப்பலைச் சிதறடித்து, அக்கப்பலின் தளபதியையும், உதவித் தளபதியையும் சிறைப்பிடிக்க வழிவகுத்தது தமிழீழத்தில்தான். கடற்புலிகளின் மகளிரணியின் தளபதியான லெப்.கேணல் நளாயினி இச்சாதனையைப் படைத்தாள்.

மூன்றாம்கட்ட ஈழப்போரில் பெண் போராளிகள் விடுதலைப் போராட்டத்தின் அனைத்துப் பரிமாணங்களிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். பல்வேறு உலக நாடுகளின் இராணுவக்கட்டமைப்புக்களில் பெண்கள் ஆணையிடும் தளபதிகளாகக் கடமையாற்ற அனுமதிப்பது கிடையாது. ஆனால் தமிழீழத்தில் பெண்கள் கட்டளையிடும் தளபதிகளாக, திட்டமிடல் வல்லுனர்களாக கடமையாற்றுகின்றார்கள். பெண்களின் உரிமைக்கென முதன்முதலில் பெண்கள் தினமாக மார்ச் 8ஐப் பிரகடனப்படுத்திய அமெரிக்காவில்கூட நடைபெறாத காட்சி இது. களமுனைகளில் பெண்கள் சாதனை படைத்து வருகின்ற அதேநேரத்தில் தமிழீழப் பெண்களது வாழ்நிலையும் பெண்கள் தொடர்பான எமது சமூகத்தின் பண்பாட்டுப்பார்வையும் வளர்ச்சியை நோக்கிய மாற்றங்களுக்கு உட்படத் தொடங்கிவிட்டது

மீட்கப்பட்ட தமிழீழப் பகுதிகளில் பெண்கள் சமூகப்பிரக்ஞையோடு விழிப்புணர்வு பெற்று வர, சிறீலங்கா அரசபடைகளின் ஆக்கிரமிப்பில் வாழும் தமிழ்ப் பெண்களது வாழ்க்கை கொடுமை நிறைந்ததாகவே உள்ளது. சிங்களப்படைகள் புரியும் நீசத்தனமான காரியங்களால் தமிழ்ப் பெண்கள் படும்பாடு சொல்லுந் தரமன்று. கொலைகள், பாலியல்வல்லுறவு, கணவன்மாரை அநியாயமாகப் பறிகொடுத்தல் என அவர்கள் படும் கொடுமைகளின் பட்டியல் நீளும். இப்பெரும் இடுக்கண்களுக்கு மத்தியிலும் அப்பெண்கள் வெளிப்படுத்தும் தேசப்பற்றும் மனத்திடமும் பிரமிக்கத்தக்கன, போற்றப்பட வேண்டியவை.

உலகப்பரந்தில் பெண்களின் நிலையை மேம்படுத்தும் திட்டங்கள் எந்தளவுக்கு இலக்கை அடைந்துள்ளன என்பதை அறுதியாகக் கூறமுடியாவிட்டாலும் தமிழீழத்தைப் பொறுத்தவரை பெண்களின் எதிர்காலம் மிகச்சிறந்ததாகவே உள்ளது. இதற்குக் காரணம் தமிழீழத் தேசியத் தலைவரவர்களின் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற விடுதலைப் போராட்டமே. உயர்ந்த இலட்சியமும்



என்பதும் இங்கு நோக்கற்பாலது.

நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்கு மேல் பெண் ஒருத்தி தனியாகச் செல்லும் நிலை எப்பொழுது ஏற்படுகின்றதோ, அப்பொழுதுதான் உண்மையான சுதந்திரம் என்றார் மகாத்மா காந்தி. இவ்வாறான சூழ்நிலை ஐரோப்பிய நாடுகளிற்கூட இல்லை. ஆனால் மீட்கப்பட்ட தமிழீழ மண்ணில் இவ்வாறான சூழ்நிலை காணப்படுகின்றது.

கடந்த இரு தசாப்தங்களுக்கு முன் பெண்களை எமது சமூகம் பார்த்த பார்வைக்கும், இப்போது பார்க்கின்ற முறைமைக்கும் பாரிய வேறுபாடு உண்டு. தலைமைத்துவப் பண்போ, சவால்களுக்கு முகங்கொடுத்து முன்னேறும் அகத்திறனோ அற்றவளாக பெண் எமது சமூகத்தால் கருதப்பட்டாள். ஆனால் இன்று போராட்ட அரசியலின் அனைத்துக் கட்டுமானங்களிலும் பெண்கள் முக்கிய பங்கெடுத்துள்ளதுடன், ஆண்களுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் திறமை காட்டி வருவது துலாம்பரமாக அனைவரும் அறிந்ததே.

நேர்மைத்திறத்துடனும் தேசியத் தலைவரவர்கள் வழிநடத்தும் செயற்பாடுகளே இவ்வாறு சமூகமாற்றத்திற்கான சாளரங்களைத் திறக்கச் செய்துள்ளன.

'ஒரு விடுதலை இயக்கத்துடன் பெண்ணினம் சேருவதன் மூலமே பெண்ணினம் தனது விடுதலை நோக்கிய இலட்சியப் பாதையில் வெற்றிபெற முடியும். வீரமும், தியாகமும், துணிவும், தன்னம்பிக்கையும், கொண்ட புரட்சிப்பெண்களாக மாறமுடியும். பெண்விடுதலைக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கும் எமது புரட்சி இயக்கத்துடன் பெண்ணினம் அணிசேரும் பொழுதுதான் எமது போராட்டமும் முழுமை பெறும்'

என்கிற தேசியத் தலைவரின் உன்னதத் துச் சிந்தனையின் பிரகாரம் தமிழீழப் பெண்கள் அணிதிரண்டு கொண்டிருக்கும் இவ்வேளையில் புலம்பெயர்ந்த தமிழீழப் பெண்கள் சமூகமும் முழுவீச்சோடு தாயக விடியலுக்குப் பாடுபடவேண்டும். ■

—சபாபதி



## ஓயாத அலைகள் -3 தொடர் நடவடிக்கையில் வன்னியின் வடமுனையில் மாவீரராகியவர்கள்

ஓயாத அலைகள்-3 நடவடிக்கையில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெயர்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு இதழிலும் வெளியிடப்பட்டு வந்தன. இவ்வரலாற்று நடவடிக்கையில் வீரச்சாவடைந்தவர்களின் பூரணமான விபரங்கள் மீண்டும் தொடராக வெளியிடப்படுகின்றன.

**2வது லெப்ரினன்ட் வாகரையான்**
நாகையா நீலநாதன்
வற்றாப்பளை, முள்ளியவளை, முல்லை.
(மானிப்பாய், யாழ்.)
வெற்றிலைக்கேணிப் பகுதி.

**2வது லெப்ரினன்ட் புரட்சியரசன்**
இராசகிருஸ்ணன் ஜெயப்பிரகாஸ்
வள்ளிபுனம், முல்லை.
(வசந்தபுரம், ஒட்டுசுட்டான், முல்லை.)
கட்டதீவுப் பகுதி.

**2வது லெப்ரினன்ட் வான்முகிலன்**
சுப்பிரமணியம் ராஜ்குமார்
நாச்சிக்குடா, விசுவமடு, வன்னி.
கட்டதீவுப் பகுதி.

**கப்டன் வானவர்மன்**
கணேஸ் உதயகுமார்
சுரேந்திரபுரம், உடையார்கட்டு, முல்லை.
(6ஆம் கட்டை, பெரியகுளம், நிலாவெளி, திருமலை.)
ஆனையிறவுப் பகுதி.

**வீரவேங்கை தனம்**
நாகராசா தனஞ்செயன்
120/01, விசுவமடு மேற்கு, விசுவமடு, வன்னி.
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி, யாழ்.)
கட்டைக்காடுப் பகுதி.

**வீரவேங்கை [illegible]**
[illegible]
கொத்தடியான்குளம், தறுக்காய், மல்லாவி, வன்னி.
(புளியங்கூடல், வேலணை, யாழ்.)
தனங்கிளப்புப் பகுதி.

**வீரவேங்கை அறிவரசன்**
கந்தையா குகனேஸ்வரன்
100 ஏக்கர், சுதந்திரபுரம், உடையார்கட்டு, முல்லை.
(பரந்தன், வன்னி.)
முகாவில் பகுதி.

**2வது லெப். விவேகன்**
நவரட்ணம் ஜெயரட்ணம்
முள்ளிக்குளறோட்,
இரணைஇலுப்பைக்குளம், வவுனியா, வன்னி.
(ஊரங்குளை, ஏழாலை வடக்கு, ஏழாலை, யாழ்.)
கட்டைக்காடுப் பகுதி.

**வீரவேங்கை பெருந்தேவன்**
சின்னத்துரை செல்வச்சந்திரன்
வள்ளுவர்புரம், றெட்பானா, விசுவமடு, வன்னி (கரவெட்டி, யாழ்.)
கட்டதீவுப் பகுதி.

**2வது லெப். செம்பியரசன்**
பெரியகருப்பன் பாலகுமார்
உடையார்கட்டு, முல்லை.
பரந்தன் பகுதி.

**2வது லெப். தங்கமாறன்**
நடராசா இராஜகுமார்
கோக்காவில் வீதி, தறுக்காய், கிளிநொச்சி, வன்னி.
பரந்தன் பகுதி.

**வீரவேங்கை கதிர்மகன்**
நாகராசா பேரின்பராசா
மத்தியகல்லூரி அருகாமை, போகபுரம், மல்லாவி, வன்னி.
(அல்லின் வீதி, காரைநகர், யாழ்.)
கட்டதீவுப் பகுதி.

**லெப்.செல்வேள்**
இரத்தினசிங்கம் கம்சதாசன்
நாவலர் வீதி, 01ஆம் வட்டாரம், முள்ளியவளை, முல்லை.
கட்டதீவுப் பகுதி.

**மேஜர் இனிதன்**
சுப்பிரமணியம் முருகதன்
தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லை.
தனங்கிளப்புப் பகுதி.

**கப்டன் நாவலன்**
தங்கராசா நர்மதாசன்
புதுக்குளம், சாஸ்திரிகூழாங்குளம், வவுனியா, வன்னி.
இயக்கச்சிப் பகுதி.

**மேஜர் கதிரவன்**
மயில்வாகனம் ஜெகதீசன்
இல. 517, 6ஆம் யூனிற், இராமநாதபுரம், வட்டக்கச்சி, வன்னி.
(பொன்னாலை, சுழிபுரம், யாழ்.)
வெற்றிலைக்கேணிப் பகுதி.

**கப்டன் அருள்மொழி**
கனேஸ் போகராசா
ஊற்றுப்புலம், உருத்திரபுரம், கிளிநொச்சி, வன்னி.
பரந்தன் பகுதி.

**மேஜர் தனுசன்**
சண்முகானந்தன் சதானந்தன்
பொன்னம்பலம் வீதி, முழங்காவில், மன்னார்.
(உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, யாழ்.)
இயக்கச்சிப் பகுதி.

**மேஜர் மதன் (ரவிசங்கர்)**
முனியாண்டி மதிமுகன்
முள்ளிக்கண்டல், அடம்பன், மன்னார்.
வெற்றிலைக்கேணிப் பகுதி.

**கப்டன் பாலவண்ணன்**
கதிர்வேலுப்பிள்ளை ஜெயகாந்தன்
இல. 264, சிவன் வீதி, வட்டக்கச்சி, வன்னி.
(வேலணை வடக்கு, வேலணை, யாழ்.)
வெற்றிலைக்கேணிப் பகுதி.

**கப்டன் கீரன்**
பேனார்ட் குலேஸ்வரன்
பல வீதி, முழங்காவில், மன்னார்.
(கொஞ்சாரிமுனை, பூநகரி, மன்னார்.)
வெற்றிலைக்கேணிப் பகுதி.

**லெப். தமிழ்நாதன்**
செபஸ்தியான் அன்ரனி அலிசா ராஜன்
சங்கக்கடை, அளம்பில், முல்லைத்தீவு, முல்லை.
வெற்றிலைக்கேணிப் பகுதி.

**லெப். சான்றோன்**
சந்திரலிங்கம் சதீஸ்குமார்
ஆத்தியடி, பருத்தித்துறை, யாழ்.
(புலோலி, யாழ்.)
கட்டைக்காடுப் பகுதி.

**வீரவேங்கை இசைநிலவன்**
செல்வராசா சதீஸ்வரன்
5ஆம் யூனிற், இராமநாதபுரம், வட்டக்கச்சி, கிளிநொச்சி, வன்னி.
கட்டைக்காடுப் பகுதி.

**2வது லெப். இளையரசன் (இசைமுத்து)**
வல்லிபுரம் குகதாசன்
அல்வாய் தெற்கு, மீசாலை, யாழ்.
தாளையடிப் பகுதி.

**வீரவேங்கை வில்லரசன்**
நாகராஜா தவரஞ்சன்
இலக். [illegible], ஐயன்குளம், புத்துவெட்டுவான், வன்னி.
(ஆவரங்கால் கிழக்கு, புத்தூர், யாழ்.)
தாளையடிப் பகுதி.

## ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் உணர்வாக அமைந்த 'பொங்குதமிழ்' விசுவமடுப் பிரதேச ஆதரவு நிகழ்வில் அறிக்கை

அரசின் தடைகளையும் மீறி உண்மையின் குரலாகவும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் மக்களின் உணர்வுகளின் நாடித்துடிப்பாகவும் யாழ். உயர் கல்விச் சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்ட பொங்குதமிழ் நிகழ்வு அமைந்திருப்பதையிட்டு நாம் பெருமிதமடைகின்றோம். இவ்வாறு 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்விற்கு ஆதரவு தெரிவித்து, விசுவமடுப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றிணைந்து நடத்திய பொதுக்கூட்டத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும், பொங்கு தமிழ் நிகழ்வை ஆதரித்து விசுவமடு மகாவித்தியாலய வளாகத்தில் அணிதிரண்டிருக்கும் இப்பிரதேச அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சிற்றூழியர்கள் ஆகிய நாங்கள் இந்தப் பேரெழுச்சி அணிதிரள்வின் மூலம் பொங்குதமிழ் நிகழ்வுக்கான எமது வலுவான ஆதரவை பறைசாற்றுகின்றோம்.

பொங்குதமிழ் நிகழ்வு தொடர்ந்து நிகழ்த்தப்படுமென்ற யாழ். உயர் கல்விச் சமூகத்தினரின் அறிவிப்பை நாம் வரவேற்றும், ஆதரவளித்தும் அதற்கு வலுச்சேர்த்தும் என்றும் செயல்படுவோம். அதற்கான செயல் பூர்வதிடசங்கற்பத்தை நாம் கொண்டுள்ளோம் என்பதையும் இவ் அணிதிரள்வின் மூலம் பறைசாற்றுகின்றோம். அதேவேளை, இராணுவத்தின் ஆக்கிரமிப்பு அற்ற சுதந்திரமாக நாம் நடமாடும் வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழும் வன்னித்தமிழ் சமூகத்தினராகிய நாங்கள் சர்வதேசசமூகத்தின் முன்னிலையிலும் எமது நிலைப்பாட்டை முன்வைக்கின்றோம்.

01. விடுதலைப் புலிகளே எமது ஒரேயொரு ஏக பிரதிநிதிகள், அதன் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களே எமது தமிழீழத் தேசிய தலைவராகவும் விளங்குவார்.

02. வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதையும், தமிழர்கள் தனித்துவமாக தேசிய சமூகம் என்பதனையும் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமை உண்டென்பதையும் சர்வதேசம் அங்கீகரிக்கவேண்டும்.

03. விடுதலைப் புலிகளால் நல்லெண்ண சமிக்ஞையாக பிரகடனப் படுத்தப்பட்ட ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை நயவஞ்சகமாகப் பயன்படுத்தி, சிறீலங்கா அரசு முன்னெடுக்கும் இராணுவ நடவடிக்கைகளை உடன் நிறுத்த அரசு மீது அழுத்தத்தை பிரயோகிக்கவேண்டும்.

04. யுத்த அச்சுறுத்தல்கள் இல்லாத சூழலில் பேச்சுவார்த்தை இடம்பெறுவதற்கு சிறீலங்கா அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்.

05. வன்னி மக்கள்மீது சிறீலங்கா அரசு விதித்துள்ள பொருளாதாரத்தடை மற்றும் மருத்துவத்தடைகளை அகற்று வதற்கு அரசை சர்வதேச சமூகம் வற்புறுத்தவேண்டும்.

06. வன்னி மாணவர்களின் கல்விசார் தொழிற்பாடுகளுக்குத் தேவையான உபகரணங்களை உரிய வேளையில் போதியளவு கிடைப்பதற்கான தடைகளை நீக்க, அரசிடம் வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

இவற்றை சர்வதேச சமூகத்தின் முன் எமது நிலைப்பாடாகவும், எமது மானசீக வேண்டுதலாகவும் முன்வைக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■



45-kalaththil 2001.jpg

# தாளையடிப் படைத்தளத் தகர்ப்பிற்கு முக்கிய பங்காற்றிய மேஜர் முடியரசன்

26.03.2000 அன்று கடற்புலிகளின் வரலாற்றில் புதிய அத்தியாயம் படைத்த நாள். ஆனையிறவுப் பெரும்தளத்தை முற்றுகையிடும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட பிரதான நகர்வாக ஆயிரக்கணக்கான புலிவீரர்கள் குடாரப்புப் பகுதியில் தரையிறக்கப்பட்ட நாள். தரையிறக்கப்பட்ட புலிகளின் அணிகள் முகமாலைக்கும் பளைக்கும் இடையில் கண்டி வீதியை ஊடறுத்து நின்றன. இந்த அணிகளுக்கு தரைவழியான தொடர்பை ஏற்படுத்த வேண்டியது மிக அவசியமாகியது. இதற்குத் தடையாக மிகப் பலமாக அரண்போல் தாளையடி முகாம் இருந்தது. இங்கு சிங்களப் படைகளின் சண்டையில் வல்லவர்கள் எனக் கருதப்படும் 53 ஆவது விசேட படையணி நிறுத்தப்பட்டிருந்தது.

28.03.2000 நள்ளிரவு புலிகள் தாளையடி முகாம் மீது பெரும் தாக்குதல் தொடுத்தனர். அதற்கு முன்னணி அவதானிப்பாளராக கேணல் கிட்டு பீரங்கிப்படையணியைச் சேர்ந்த மேஜர் முடியரசன் மிகத் திறம்படச் செயற்பட்டான். அன்று கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவக் காவலரண்கள் பல கைப்பற்றப்பட்டன. ஆனால், இராணுவத்தால் புலிகளின் அன்றைய முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது. என்னவிலை கொடுத்தாவது தரைவழிப் பாதையைத் திறக்க வேண்டிய அவசியம் புலிகளுக்கு ஏற்பட்டது. இராணுவம் தாளையடி முகாமை புலிகள் தாக்குவார்கள் என்பதை முழுமையாகப் புரிந்துகொண்டு அதற்கான முழுத் தயாரிப்பையும் செய்துகொண்டு இருந்தது.

மீண்டும் 29.03.2000 அதிகாலை 2.30இற்கு தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. சண்டையில் முடியரசனின் பங்கு மிக முக்கியமானதாக இருந்தது. அவன் தன் பணியை மிகத் திறம்படச் செய்தான். எதிரியின் ஒவ்வொரு அசைவு, நகர்வு, செயற்பாடுகளை அவதானித்து அதற்கு அமைய சண்டையை நகர்த்தினான் முடியரசன். சாதுரியமான உறுதியான முடிவுகளால் எதிரியை விரட்டியபடி முன்னேறினான். எல்லாத் தளபதிகளின் தொலைத் தொடர்புகளிலும் முடியரசன் முடியரசன் என்ற பெயர் ஒலித்த வண்ணம் இருந்தது. ஒரு போர்வீரனுக்குரிய கடும் உழைப்பு, விடாமுயற்சி, துணிவு, உறுதி இவற்றை சிங்கள அரசின் ஷெல், ரவை மழைகள் மத்தியில் திறம்பட வெளிப்படுத்தினான்.

காலை 8.55 மணிக்கு தாளையடி பிரதான வீதியில் இருந்த பிரதான இராணுவத் தளத்தைக் கைப்பற்றி குடாரப்புப் பகுதியில் இறக்கப்பட்ட புலிகளுடன் கைகுலுக்கிக் கொண்டான். புலிகளின் வரலாறுபடைத்த தரையிறக்கத்திற்கு உயிர் கொடுத்ததில் முடியரசனின் பங்கு மிக முக்கியமானது.

உயர்ந்த கறுத்த மெலிந்த அவனுடைய தோற்றம், பார்க்கும் கண்களிற்குச் சாதுவாகத் தெரிந்த அவன், இப்படி ஒரு அபாரதுணிவுள்ள போர் வீரன் என யாரும் மதிப்பீடு செய்யமாட்டார்கள்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவன் பளைப் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்தான். தாளையடியில் இவன் செய்த போர்ச் சாதனைகள் இன்றும் எம் மனத்தில் பசுமையான நினைவுகளாய் உள்ளன. ■



முகிலன் – (போராளி)

# -சமாதான சூழலை அரசு பயன்படுத்தத்தவறின் ஆயுதப் போராட்டம் மூலமே கல்விச்சமூகம் உரிமைகளைப் பெறவேண்டிய நிலைவரும்!

*சமாதானத்தை ஏற்படுத்த தற்போது நல்லதோர் சூழல் பிறந்துள்ளது. இதனைப் பயன்படுத்த சிறிலங்கா அரசு தவறுமானால் சாத்வீகரீதியான போக்குகளைக் கைவிட்டு விடுதலைப் புலிகளின் ஆயுதரீதியான போராட்டத்துடன் இணைந்து எமது உரிமைகளைப்பெற வேண்டிவரும் என்பதைத் தங்களிற்கும் உலகிற்கும் தெரியப்படுத்துகின்றோம் என கரைதுறைப்பற்று கல்விக்கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், பேரெழுச்சிக்குழுவினர் இலங்கை இணைவிவகார சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிற்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் சுட்டிக் காட்டியுள்ளனர்.*

**இம் மகஜரின் விபரம் வருமாறு:**

இலங்கைத்தீவில் சிறீலங்கா அரசால் சிறுபான்மை இனம் எனக் குறிப்பிட்டுச் சகல விதங்களிலும் ஒடுக்கப்பட்டுவரும் தமிழ் மக்கள், தமது உரிமைகளைப்பெற தீர்க்கமான ஒரு முடிவை எடுக்க வேண்டிய கட்டம் ஏற்பட்டுள்ள நிலையில், எமது நிலையைத் தெளிவுபடுத்தும் முகமாக இந்த மனுவைத் தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

1995இல் தற்போதைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின் இராணுவரீதியாக தமிழ் மக்கள் மிகக் கொடூரமாக ஒடுக்கப்பட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தை இராணுவம் ஆக்கிரமித்தது. வன்னியையும் ஆக்கிரமித்தது. யாழ்ப்பாணத்தைப் பொருளாதாரத் தடை மூலம் வதைத்த அரசு, அதனை தாம் கைப்பற்றியபோது தடைசெய்யப்பட்டவற்றையெல்லாம் வழங்கியது, வசதிகளை வழங்கியது. ஏனைய பகுதித் தமிழர்களை மிகமோசமாக ஒடுக்கியவாறு யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்துக்கு அதிகூடுதல் வசதிகளை வழங்கியது. இதன் மூலம் யாழ்ப்பாணச் சமூகம் தனக்கு ஆதரவாக இருப்பதாக வெளியுலகிற்குக் காட்டியது.

மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் இராணுவப் பகுதிகளிலும் இத்தகைய வசதிகளை வழங்கி அரசு பிரச்சாரம் செய்தது. அதற்கும் மத்தியில் இப்பகுதிகளில் தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டவர் காணாமல்போயினர், பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டனர், படுகொலை செய்யப்பட்டனர். 80 வீத தமிழ் மக்கள் இராணுவப் பகுதிகளில் வாழ விருப்பம் கொண்டவர்கள் என சிறீலங்கா ஜனாதிபதி அறிவித்தார். ஆனால், இதற்கெல்லாம் மாறாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம், யாழ்ப்பாண மக்களின் வெளிப்பாடாக தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமைகளையும், தமிழரின் மரபுவழித் தாயகத்தை அங்கீகரிக்கவும் கோரி பொங்கு தமிழ் என்ற எழுச்சி நிகழ்ச்சியை நடத்தினர். இதுபோல் வவுனியா இணைந்த பல்கலைக்கழகமும், மட்டக்களப்பு பல்கலைக்கழகமும், வெளிநாடுகளில் நோர்வே, கனடா, அவுஸ்திரேலிய பல்கலைக் கழகங்களின் தமிழ் மாணவர் சமூகமும் கோரிநிற்கின்றன. இந்த சாத்வீகப் போராட்டத்தையும் இராணுவ பலம் கொண்டு அரசு ஒடுக்க முயன்றது. இவற்றையும் மீறி அவர்கள் உரிமைகளுக்காகக் குரலெழுப்பினர். தொடர்ந்தும் குரல் எழுப்பி வருகின்றனர். நோர்வே அரசின் சார்பில் தாங்கள் விடுதலைப் புலிகளுடனும், சிறீலங்கா அரசுடனும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முயற்சி மேற்கொண்டுள்ள நிலையில், தங்களின் வேண்டுகோளின் பேரில் நல்லெண்ண நோக்கில் விடுதலைப் புலிகள் ஒருமாதப் போர்நிறுத்தத்தை அறிவித்தனர். இதனை அரசு ஏற்கவில்லை.

விடுதலைப் புலிகளின் போர்நிறுத்தத்தை நிராகரித்ததன் மூலமும், தனது போர்முனைப்பு மூலமும் சிறீலங்கா அரசு தங்களின் நடுநிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கத் தயாரில்லை என்பதைத் தெளிவாக்கியுள்ளது. இந்த நிலையில் அரசால் மிக மோசமாக ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களில் மேலும் மோசமாக ஒடுக்கப்பட்ட நிலையில் வன்னியில் நாம் வாழ்கின்றோம். கிளிநொச்சி, முல்லைத்தீவு முழுமாவட்டப் பகுதியிலும் மன்னாரின் இரு உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் 3 லட்சத்து 60 ஆயிரத்து 573 மக்கள் அரசின் பொருளாதாரத்தடை, மருந்துத்தடை, தொடர்புலகத் தடைகளால் வதைக்கப்படுகின்றனர். இந்த மக்களில் 2 இலட்சத்து 95 ஆயிரத்து 559 மக்கள் சிறீலங்கா இராணுவத்தினர் எமது நிலங்களை ஆக்கிரமித்ததால் இடம்பெயர்ந்தவர்களாக உள்ளனர். வன்னியின் கிளிநொச்சியை 1996இல் கைப்பற்றிய இராணுவம் அங்கு பிடித்த தமிழ் மக்களில் 184 பேர் காணாமல் போயினர். இவர்களில் 60இற்கு மேலானோர் எலும்புக்கூடுகளாக இதுவரை மீட்கப்பட்டுள்ளனர். இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணமும் ஆண்டுக்கு ஆண்டு அடிக்கடி வெட்டப்பட்டு வருகின்றது.

நிலங்கள் இராணுவத்தால் பிடிக்கப்படும் அதேவேளை படைகள் மக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொள்ளும் விமானக் குண்டு வீச்சுக்கள், கடற்படையினரின் தாக்குதல்கள், எறிகணை வீச்சுக்கள், உயிரிழப்புகளை ஏற்படுத்துவதுடன் உளப்பாதிப்பையும் அதிகமாக்கியிருக்கின்றன.

இத்தகைய பல்வேறு பரிமாணங்களிலான பாதிப்பு மாணவர்களின் கல்வியை மிக மோசமாகப் பாதித்துள்ளது. ஏற்கனவே தமிழ் மக்களின் கல்வி சிங்கள கல்விமான்களினால் தீர்மானிக்கப்பட்டு, அதன்படி தமிழ் மக்களின் சகல அம்சங்களும் புறக்கணிக்கப்பட்டு சிங்கள வரலாறும், சிங்கள வணக்கமும் சித்திரிக்கப்படும் கல்வி, தமிழ் மாணவர்களுக்குத் திணிக்கப்படுகின்றது. தமிழ் பாடநூல்கள் எதுவித பொறுப்புமற்று மிகமோசமான பிழைகளுடன் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன.

இத்தகைய சிங்களத் திணிப்பு கல்வியைக் கற்க தமிழ் மாணவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்ற அதேவேளை, வன்னி மாணவர்கள் மீதான சுமைகள் மிக அதிகமாகும். 40 ஆயிரத்துக்கும் அதிக மாணவர்கள் வன்னியில் கல்வி கற்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் வறுமையாலும், போசாக்கின்மையாலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள். போரால் தமது உறவினர் தாய் தந்தையரை இழந்தவர்கள்.

கொழும்பை மையப்படுத்திய புதிய கல்வித்திட்டத்தின்படி கற்பதற்கான எவ்வித வசதிகளும் அனுமதிக்கப்படவில்லை. பதிலாக மேலும் மேலும் எமது மாணவர்கள் ஒடுக்கப்படுகின்றார்கள்.

இவ்வாறு தமிழ் மக்களின் நிலை மேன்மேலும் மோசமாகி வருகின்ற சூழலில், தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க சிறீலங்கா அரசு தயாராக இல்லாத நிலையில், எமக்கான எந்த ஒரு சுயநிர்ணய உரிமையும் மறுக்கப்படுகின்ற நிலையில், வன்னியில் மேலதிகமாக இராணுவத்தால் பொருளாதாரரீதியாக, வாழ்வுரீதியாக ஒடுக்கப்படுகின்ற நிலையில் கல்விச் சமூகத்தினராகிய நாம் ஒருமுடிவை எட்டவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளோம். இதுவரை நாம் நடத்திய சாத்வீகரீதியான போராட்டங்கள் யாவுக்கும் சிறீலங்கா அரசு இராணுவ நடவடிக்கைகளையே எமக்குப் பதிலாக வழங்கிவருகின்றது.

தங்களுடனான சமாதானப் பேச்சிலும் அரசு தமிழ்மக்களுக்கான உரிமைகளை வழங்கத் தயாராக இல்லாத நிலையில் கல்விச்சமூகத்தினரான நாமும் முடிவு ஒன்றை எடுக்க சிறீலங்கா அரசு எம்மை நிர்ப்பந்தித்துள்ளது.

தற்போது சமாதானத்தை ஏற்படுத்த நல்லதொரு சூழல் பிறந்துள்ளது. இதனைப் பயன்படுத்த சிறீலங்கா அரசு தவறுமானால் சாத்வீகரீதியான போக்குகளைக் கைவிட்டு, விடுதலைப் புலிகளின் ஆயுதரீதியான போராட்டத்துடன் இணைந்து எமது உரிமைகளைப் பெறவேண்டிவரும் என்பதை தங்களிற்கும் உலகிற்கும் தெரியப்படுத்துகின்றோம். ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## வேங்கைக் கொடியேற்றி வாழ்க!

*தமிழினத்தின் இழிநிலையை*
*மாற்ற வந்த தலைவனே*
*மக்களின் மனங்களிலே*
*குடிகொண்ட மன்னவனே*
*ஆயிரம் பேர் தாம் தலைவன்*
*என்று கூறி நின்றாலும்*
*உலகத் தமிழினத்தின்*
*உச்சத் தலைவன் நீ.*

*வஞ்சப்பேச்சுப் பேசிப் பலர்*
*[illegible]*
*[illegible]*
*எத்தனையும் உற்று நோக்கும்*
*உலகத்தின் கண்களெல்லாம்*
*இமை திறந்து பார்க்குதையா*
*இவன் வீரத் திறமையென்று*
*[illegible]*

*தரணியிலே புகழ்பெற்ற*
*தானைத் தலைவன் நீ*
*எம் இனத்தில் வந்துதித்தாய்*
*நாம் செய்த பாக்கியம்*
*வாழ்க எம்தலைவா நீ*
*வாழ்த்துகிறோம் மனம் நிறைந்து*
*வேங்கைக் கொடியேற்றி*
*வாழ்க நீ பல்லாண்டு.*

ஆழியவளையூர் எஸ்.சீ. சிங்கன்
நோர்வே

# லெப்டினன்ட் கேணல் அருணா

வளங்கொழிக்கும் வடமராட்சியின் ஓர் சிற்றூரான துன்னாலையில் 1973ஆம் ஆண்டு இராசேந்திரம் பூமணி தம்பதிகளின் இரண்டாவது தவப்புதல்வனாகப் பிறந்தவன்தான் சசிகரன். இவன் சிறுவயதிலேயே துடுக்குத்தனம் மிகுந்தவன். மற்றவர்களை மகிழ்வித்து தானும் மகிழ்வதில் கெட்டிக்காரன். இவ்வாறாக வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி ஆண்டுகள் புரண்டோடின.

இக்காலப் பகுதியில்தான் சசிகரன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றுவந்தான். பள்ளிப்பராயத்தில் துள்ளும் காளையாகத் திகழ்ந்தான். விளையாட்டுப் போட்டிகள், பொது அறிவு சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் யாவிலும் முன்னணி வீரனாகத் திகழ்ந்தான். அதுமட்டுமன்றி பாடசாலையின் மாணவர் தலைவர்களுள் ஒருவனாகவும், ஒழுக்கத்தில் சிறந்த மாணவனாகவும் கல்லூரி அதிபரால் தெரிவாகிப் பாராட்டப்பட்டான். இவ்வாறு கல்வியைத் தொடர்ந்த சசிகரனுக்கு இராணுவ ஆக்கிரமிப்பின் காரணத்தினால் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது.

1987ஆம் ஆண்டில் தமிழீழப் பிரதேசம் எங்கும் தனது அடாவடித்தனத்தை கட்டவிழ்க்க இந்திய இராணுவம் பள்ளிச்சிறார்களை கடுமையாகத் துன்புறுத்தியது. பாடசாலை செல்லமுடியாத நிலை. இந்நிலையில்தான் சசிகரன் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தான். 1989ஆம் ஆண்டு இவன் தன்னை ஓர் முழுமையான விடுதலைப் போராளியாக இணைத்துக்கொண்டான்.

1989ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் வன்னிப் பயிற்சிப் பாசறையில் சசிகரன் ஓர் பயிற்சிப் போராளியாக இணைக்கப்பட்டு 'அருணா' என்ற பெயருடன் பயிற்சியை முடித்து கடமைக்காக வேறோர் இடம் மாற்றப்பட்டான். இக்காலப்பகுதியில்தான் வன்னிப் பெருநிலப்பரப்பில் இந்திய இராணுவத்துடன் பல நேரடிச் சமர்களில் பங்குகொண்டு தனது திறமைகளை வெளிக்காட்டினான். இவ்வாறு சிலமாதங்கள் புரண்டோடி இந்திய இராணுவம் தமிழ் மண்ணைவிட்டு வெளியேறியது.

1990ஆம் ஆண்டு மீண்டும் சிறீலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானது. இக்காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் புதிய படையணிகள் பல புதிதாகத் தோற்றம்பெற்று தாக்குதலணிகளாக உருவெடுத்தன. இதில் யாழ். மாவட்ட தாக்குதல் படையணியின் ஒரு போராளியாக அருணாவும் இணைந்துகொண்டான்.

1991ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ. சமரில் அருணா சிறு குழுவொன்றிற்குத் தலைமைதாங்கி இச்சமரில் தன் திறமையை வெளிக்காட்டினான். இச்சமரில் அருணாவின் சகோதரியான கப்டன் லீமா விடுதலைக்கு வித்திட்டுச் சென்றார். இச்சமரில் புலிகள் பலவீனம் அடைந்ததென்று எண்ணிய சிறீலங்காப் படைகள் மீண்டும் 'மின்னல்' என்ற பெயருடன் பாரியதொரு இராணுவ நடவடிக்கையால் ஈழத்தமிழர்களின் இதயபூமியான மணலாற்றைக் கைப்பற்றும் நோக்குடன் 1991ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டது. இதற்கெதிராக விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அருணாவின் பங்கும் முக்கியமானது. இச்சமரில் அருணாவின் திறமையினைக்கண்ட பொறுப்பாளர் இவனை 50 கலிபர் ஆயுதத்தின் பிரதான சூட்டாளராக நியமித்தார்.

இக் காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் முன்னேறமுயன்ற இராணுவத்தினருக்கு எதிரான பல தாக்குதல்களில் பங்குகொண்டான்.

1991ஆம் ஆண்டு லெப். கேணல் ராஜன் அண்ணாவின் தலைமையில் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி அமைக்கப்பட்டு பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் திறமையின் அடிப்படையில் அருணாவும் தெரிவானான். சில காலம் படித்த இவன் சிங்கள இராணுவ நடவடிக்கையான 'பலவேகய-2' என்ற பெயருடன் இயக்கச்சியைக் கைப்பற்றி கட்டைக்காட்டுக்கான தனது தொடர்பை வலுப்படுத்தும் நோக்குடன் வந்த சிறீலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வெடித்த உக்கிரச் சமரில் பங்குகொண்டான்.

இச்சமரில் பின்தள வேலைகளை களத்தில் நெறிப்படுத்தும் பொருட்டு அருணா தளபதியால் நியமிக்கப்பட்டார். இதில் இவனின் வழி நடத்தலையும், படைநடத்தலையும் கண்ட தளபதி இவரை வேவு அணியின் ஓர் உறுப்பினராக இணைத்துவிட்டார். வேவு அணியிலும் தனது திறமைகளை வெளிக்காட்டிய அருணா குறுகிய காலத்தில் வேவு அணியின் ஒருபகுதிக்குப் பொறுப்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டான்.

மாதகல் பகுதியில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பதுங்கித்தாக்குதல் ஒன்றில் சிங்கள இராணுவத்தினர் பன்னிரெண்டுபேர் கொல்லப்பட்டனர். இத் தாக்குதலுக்கு அருணாவின் தலைமையிலான பத்துப்பேர் கொண்ட வேவு அணியே தாக்குதல் அணியாக மாறி இருந்தது.

'மாதகல் படைகளின் தலைகள் பன்னிரெண்டு புலிகள் அணியிடம் பலிகள் ஆனது'

அருணா நினைத்ததை நடத்தி முடித்தான். இச் சண்டையிலும் இவன் திறமைகளைக் கண்ட தளபதி 1993ஆம் ஆண்டு இவனை எழிலுடன் கடல்வளம் கொழிக்கும் பிரதேசமான 'வடமராட்சிக்குத்' தளபதியாக நியமித்தார். இக்காலப் பகுதியில்தான் வடமராட்சி மக்களின் மனங்களைக் கவர்ந்தான். மக்களின் துன்ப துயரங்களில் பங்கெடுத்து பல பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தான். பல மாவீரர் நிகழ்வுகளை முன்னின்று சிறப்பாக நடத்தினான்.

இவன் திறமையின் காரணமாக வடமராட்சியின் 'விசேட தளபதியாக' பணியாற்றினான். இக்காலத்தில்தான் வடமராட்சியின் பலாலி கிழக்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் நிலைகளை தாக்கியழிக்கும் நோக்குடன் 1995ஆம் ஆண்டு அருணாவின் தலைமையில் ஒரு மோட்டார் தாக்குதலுக்குத் திட்டம் தீட்டப்பட்டது. தாக்குதலும்

## கடற்புலிப் போராளிகள்

ஆரம்பமானது. தாக்குதல் உக்கிரத்தால் தாக்குப்பிடிக்க இயலாத படையினர் இராணுவ நிலைகளைவிட்டுப் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். ஓடியபடைகள் ஏவிய எறிகணையின் சிதறுண்ட துண்டொன்றினால் அருணா தன் காலொன்றினை இழக்கநேரிட்டது. காயம் மாறியபின் யாழ். மாவட்ட நிர்வாக வேலைகளை நேர்த்தியாகச் செய்து வந்தான். பின்னர் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைகளில் பங்குகொண்ட அருணா, தளத்தின் பின்பகுதி வேலைகளைச் செய்துவந்தான். இடப்பெயர்வின்பின் வன்னியில் இருந்து யாழ். மாவட்டத்திற்கான போராளிகளின் விநியோகத்தை மேற்கொண்டான்.

1996ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் கடற்புலிகள் அணியில் தன்னை இணைத்துக்கொண்டான். இவன் இணைந்து குறுகிய காலப்பகுதியிலேயே இவனது திறமையின் அடிப்படையில் கடற்புலிகளின் 'நரேஸ்' கடற்தாக்குதல் படையணிக்குத் தளபதியாக நியமிக்கப்பட்டான்.

இக்காலப்பகுதியில் கடலில் உலாவிய கடற்படையுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல தாக்குதல்களைத் தொடுத்து கடற்படையின் கடற்கலங்களை மூழ்கடித்தும், சேதமாக்கியும் பல வெற்றிகளை திருமலைக் கடலில் நிலைநாட்டினான்.



லெப்.கேணல் அருணா/அருணன்
இராசேந்திரம் சசிகரன்
16.12.1973-22.09.1998

1998ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதியும் ஒரு தாக்குதல் திட்டமிடப்படுகின்றது. இதில் கடற்புலிகளின் பல அணிகள் பங்கெடுத்துக்கொள்கின்றன. இச்சமரில் ஒரு தொகுதி படகு அணியின் கட்டளை அதிகாரியாக அருணா நியமிக்கப்பட்டான். தாக்குதலிற்கான நாளும் வந்து தாக்குதல் ஆரம்பமானது. திருமலைக் கடல், போராளிகளை வரவேற்று போர் உபாயங்கள் கட்டவிழ்க்கப்பட்ட நேரம் அருணாவின் படகுத்தொகுதி கடற்படையுடன் சரமாரியாக மோதியது. தாக்குதல் உக்கிரத்தால் தாக்குப்பிடிக்க முடியாத கடற்படை நீண்ட தூரம் சென்றுவிட்டது. மீண்டும் தாக்குவதென்ற முடிவோடு முன்னேறிய அருணாவின் படகுத்தொகுதி மீண்டும் சமரைத் தொடுத்தது. சமரில் எதிரியினால் ஏவப்பட்ட ரவை ஒன்று அருணாவின் கழுத்தை துளைவிட்டுச் சென்றது.

'லெப்.கேணல் அருணா தமிழீழ அன்னையின் கடல் மடியில் வித்தானான்'

கொண்ட இலட்சியம் குன்றிடா எங்களின் கொள்கை வீரனின் காலடி மண்ணிலே நின்று

கொண்டொரு போர்க்கொடி தூக்குவோம்

நிச்சயம் தாயகம் காண்போம்.

இவனின் இலட்சியம் மீது உறுதி எடுத்துக்கொள்வோம். ■



விடிகின்ற அதிகாலையும்
பொழுதானவன்– கடல்
மடியில் தவழ்கின்ற புலியானவன்
கொடியேற்றி படகேறி
விளையாடினான்– பகை
பொடியாக உயிர் தந்து ஒளியாகினான்
இடியாக எதிர்கொண்டு பகை
மோதினான்– அருணன்
முடியாத கதையாகித் தினம்
வாழுவான்
விடிகாலை மலர்தூவி
விளக்கேற்றுவோம்– இவன்
அடிவேரில் துளிராகிக்
கொடியேற்றுவோம்.

-புதுவை இரத்தினதுரை-

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive




47-kalaththil 2001.jpg

# கண்ணீரில் மிதக்கும் துயரம்

நாடுகள் அதிரும்
'றைபிள்'களின் சிரிப்பில்
உடல் வறண்டு தலைவிறைத்து
கபாலமுறைந்த எனது காடே!
பீரங்கிகளின் பேச்சில்
செயல்களற்ற ஒரு சிறு காலத்தை
நீ பெற்றிருப்பாய் -
அந்தப் பேச்சில் எந்தவித சாரமும் இல்லையென
காற்று உனக்குச் சொல்லியிருக்கும்
எனது பறவைகள்!
இரக்கமற்ற ஒரு இரவின்
திசையைத் தொலைத்திருக்கும்
அவற்றின் அலறலின் ஓசையை- நிச்சயமாய்
றைபிள்களினதும் பீரங்கிகளினதும் ஓசை
மேவியிருக்கும்
எனது காடே!
நா வறண்டு போகும் மொழியில் - நீ
குளறியிருப்பாய்....
கனவுகள் அழிந்த வாழ்வை
இறகினில் பொருத்தி எங்கோ பறந்தன
எனது அகதிப் பறவைகள்- அவை
அடர்ந்த இன்னொரு வனத்தின்
இருளில் அமர்ந்தோ!
சூனிய வெளியின் வெறுமையில் கலந்தோ!!
சோடி தொலைந்த துயரப் பொழுதை
விம்மி விம்மி...
தீயெழும் அந்தத் துயரப் பாடலால்
காற்றைக் கிழிக்கும்,
ஒருசோடி கண்ணீர்ப் பாடலில்
புதைந்தபடி புதைந்தபடி
எனது காடே! எனது காடே!!
எப்படியாய் இருக்கும்
உனக்கு.

முல்லைக் கமல்




# சகிப்பு மீறியெழும்

நிச்சயமாக
மூவாயிரம் அடிக்குமேல்
முகில்களுக்கிடையில் ஊழையிடும் விமானங்களில்
கொலைகாரர்கள் திரிகிறார்கள்
காலவரையற்ற ஊரடங்குச் சட்டங்களிலும்
போர்ப்பிரகடனங்களுக்குள்ளும்
சிக்குண்ட இந்த நாட்களில்
ஒரு நல்ல கவிதை
அதை யாராவது எழுதட்டும்
ஆனால், இது இப்போது முக்கியமானது.
நான் உழைக்கின்றேன்
இந்தக் கோடையிலும்
எதிர்க்காற்றிலும்
நீயும் நன்றாக வேலை செய்கின்றாயடா.

எனது உழைப்பால்
வீடும்
எப்பொழுதும் சோலையான
தோட்டமும் எங்களுக்கிருந்தது.

பனையோலாம் நுங்குதள்ளி
சோழகம் வீசிய அந்த நாளொன்றில்
எங்கள் வீடும் தோட்டமும்
இரக்கமின்றி அழிக்கப்பட்டது
நாங்கள் விரட்டப்பட்டோம்
நாங்கள் ஓடி வரும்போது
எங்களின் பூனைக்குட்டிகள்
இடிபாட்டுக்குள் சனமாகக் கத்திக்கேட்டது
அந்த வேளையில்
பார்வை குறைந்த அம்மாவின்
மூக்குக்கண்ணாடியைக்கூட எடுக்கமுடியாமற்போயிற்று.

துக்கமாகவும்
கடுங்கோபத்துடனும்
இந்த நிகழ்ச்சியை நான் சொல்லும்போது
பலரும் சொல்கிறார்கள்
தங்களுக்கும் இப்படி நிகழ்ந்ததென்று

இன்றைக்கும்
இராணுவத்தின் மணம்
மூக்கை எரிக்கிறது
அதன் காட்டுமிராண்டிக் கூச்சல்
காதுகளைக் கிழிக்கிறது
மாறி மாறிக் குண்டுகளைப் போட்டுச் செல்லும்
விமான ஓட்டிகளை
கோரம் பொங்கியெழ
வெறுமனே திட்டுவதையும்
முன்பிடியை ஓங்கிக் குத்துவதையும்
இனியும் நான் விரும்பவில்லை
பறிக்கப்பட்ட
எனது வீடு எனக்கு வேண்டும்
அந்த வீட்டையும் தோட்டத்தையும்
நான் பெறவேண்டும்
உணவு
உடை
உறையுள் என்பவற்றுடன்
பாதுகாப்பும் மிக மிக அவசியமாகிவிட்டது.

கவிதையின் அனுபவிப்பு
சினிமாவின் ரசனை ஓவியத்தின் கற்பனை
என்பதெல்லாம் இதனுள் அடங்குகின்றது.

அந்தப் பூனைக்குட்டிகளின்
சனக்குரலை
என்னால் சகிக்க முடியவில்லை.

கருணாகரன்